573

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ௵ பிப்ரவரி ௴ 21 ௳ [No. 8

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 113
2. அணியிலக்கணம் (தன்மை அணி) 115
3. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A.,B.L. 118
4. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 3-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.,B.L. 119
5. சூரியன் - (வடிவமும் அமைப்பும்)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 120
6. கம்பராமாயணம் (கார்காலப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 121
7. பாரதியார் வேதாந்தப் பாடல்
R. நரஸிம்மன் B. A. (Honrs) 124
8. வில்லிபாரதம்—(துரியோதனன்) 
K. T. விஜயராகவாச்சாரியார் B.A. 126
9. வர்த்தமானம் 128

## கலாநிலயம்

### கடவுட் சித்தம் 5.

திருவள்ளுவர், செம்பொருள் அல்லது மெய்ப்பொருள் என்று அழைக்கின்ற அம்முதற்பொருள், ப்ளேட்டோவினால் உரைக்கப்படுகின்ற 'கருத்து' அல்லது பாவனையை எத்தூரம் ஒத்திருக்கின்றதென்பதை முன்னைய இதழில் ஆராய்ந்தோம். உபநிடதங்களிலும் இதற்கிணையான சிந்தனைகள்பல செறிந்திருக்கின்றன. இவ்வகையில், தத்துவ உணர்வுடைய வித்தகம் அனைத்தும் பெரும்பாலுங் குறிக்கின்ற நெறியொன்றே.

புலன்களினாவே எட்டியிருக்கின்ற இந்நிலையற்ற நிகிலப் பொருள்களைப் புலனுலகம் என்று அழைக்கலாம். அந்தப் புலனுலக உண்மைகள் மெய்ம்மையின் செம்மையையேனும் முழுமையையேனும் தெரிவித்து நிற்கவில்லையென்றும், செம்மையின் முழுமையோடு நிரந்தரமாய் நிலைபெற்றுள்ள வேறோர் உலகின் நிழலினது கலங்கிய தோற்றமே இப்புலனுலகஉண்மைகள் என்றும், ஆதலின் இவ் வுண்மைகளின் அனுபவங்களைமட்டுமே ஆதாரமாகக் கொண்டக்கால் மெய்யுணர்வுஅடைய இயலாதென்றும், நிரந்தரமாகிய அவ்வுலகினைக் கலங்கலில் காட்சியால் கருத்துட்கொள்வதே உய்யும் நெறிக்கு உதவியாகவல்ல முறைமையாமென்றும் ப்ளேட்டோ கொண்டுரைத்த இக்கொள்கையை ஐயமறத் தெளிந்து மனதிற்கொண்டக்கால், கடவுளின் சித்தத்தை நடத்திவைக்கவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டுள்ள வாழ்க்கையொன்றே வாழ்வாங்கு வாழ்கின்ற வாழ்க்கையாகும் என்று இவ்வரிசைக் கட்டுரைகளின் துவக்கத்தில் யாம் இட்டுரைத்திருக்கின்ற கருத்தினைத் தொடர்வது எளியதாவதுடன், பயன்தரக் கூடியதாகவும் அமையும்.

புலன்களுக்கு எட்டுகின்ற தோற்றத்தையும், அதனைச் சோதித்துக்காட்டுகின்ற அறிவையுங் கொண்டு திரள்கிற இந்நிலையற்ற நிகிலப்பொருள்களனைத்தும் நிழல்களேயாதலின், அந்நிழலிற்குரிய நிரந்தரமெய்ம்மையாம் மூலப்பொருள்களால் அமைந்த வுலகினை ப்ளேட்டோ பாவனையுலகம்என்று அழைக்கின்றார். ஒரு பொருளினது தோற்றத்திற்கும் அந்தத் தோற்றத்தைக்கடந்த அதனுண்மைக்கும் இடையே உள்ள ஒரு வேற்றுமை எத்துணைப்பெரியதோ, அத்துணைப் பெரியதே உண்மையாய புலனுலகிற்கும் மெய்ம்மையாம் பாவனையுலகிற்கும் இடையேகிடக்கின்ற வேற்றுமையும் ஆகும் என்பார் அவர். ஆதலின், அவர் கருத்தின்படி இம்மெய்ம்மையாம் பாவனை எத்தகையது என்பதைச் சிறிது ஆராய்ந்து மனதில் நிறுத்தக்கொள்ளவேண்டியது இங்கு அவசியமாகின்றது.

முதலில் நாம் அறிந்துகொள்ளவேண்டியது ஒன்றுண்டு. 'பாவனை' என்னுஞ்சொல் இங்குப் பயின்றுவரும்வகையில் விளைவிக்கக்கூடிய ஒருமயக்கத்தைத் தெளிவிப்பது நலம். உண்மை ஒருவாறாக, அதற்கு மாறாக அவரவர் தம் மனத்திற்கு இசைந்தபடி ஒன்றினைப் பாராட்டுவாராயின், அப்பொழுது "அவர் இதனை இப்படிப் பாவனைசெய்துகொண்டார்" என மொழிநடையில் இச்சொல் வழங்கிவருவது உண்டு.

இவ் வழக்கின்படி, உண்மைக்கு மாறாகப் புனைந்து கொண்ட வொரு பொய்யையே பாவனை என்னும் இச்சொல் குறிக்கிறது. மற்று, ப்ளேடோவின் கருத்திற்கு நாம் பெயரிட்டழைக்கும் இப் 'பாவனையோ' அவ்வழக்கிற்கு நேர் மாறான வொரு மெய்ம்மையை நிகழ்த்துகின்ற தென்பதை மறத்தல்ஆகாது. உண்மைக்கும் அப்பாலாகிய வொரு மெய்ம்மைநிலைக்கே 'பாவனை' என்று பெயரிட்டார் ப்ளேடோ.

எனின், நினைப்பவர் மனதிலன்றிப் புறத்தே தாமாகத் தனிநிற்கின்ற நிலை பாவனைகளுக்கு உளது. ஆதலின் அவை கனவிற் காண்கின்ற பொருள்கள்போன்றன வல்ல. கனவுப்பொருள் களுக்குக்கனாக்காண்கின்றவன் மனத்திலன்றி வேறு இருப்பு இல்லை; இப்பாவனைகளுக்கோ வேறாகிய தனியிருப்பு உண்டு. அந்தரம் நோக்கில், தனிநிலை யுள்ளனவென்று நாம் விவரிக்கின்ற இந்நிலப்பொருள்கள்தாம் 'கண்ட கனவின் பொருள்போல் யாவதும் பொய்' என மதிக்க வேண்டும் என்பர் ப்ளேடோ. மற்று, நம் மனத்தில் மாத்திரந்தான் உள்ளனவோ என்று ஐயுறக்கூடிய இப் பாவனைப்பொருள்களே அந்தரத்தில், புறத்தே நிலையுள்ள மெய்ப்பொருள்களாம் என்கின்றார். ஆதலின், இப் பாவனைகள் தனித்தனி மனிதருக்குமனிதர் வேறுபடநின்று அவரவருக்கே உரித்தாயிருக்கிற விஷயங்கள் அல்ல; மற்று, எல்லா மனிதர்களாலும் பொதுவாக மனத்திற்கொள்ளப்பட்டிருக்கின்றவைகளும் அல்ல அவை. தாமே தம்மளவிலேயே மெய்ம்மையானவை; புலனுலகினின்று வேறாகி நிற்கவல்லதரத்தன பாவனையுலகின் பொருள்கள். மாறாத அம்மெய்ம்மையைப் பற்றிக்கொள்ளலே மெய்யறிவாம்; மற்று, புலனுணர்வினின்றுபிறந்த வெறும் 'அபிப்பிராயங்களை' மெய்யறிவென்று கொள்ளலாகாது என்பார் அவர். ப்ளேடோவின் ஆசிரியராகிய ஸாக்ரிடீஸ் என்பவர், அறிவின்உறுதிக்கு அவசியமும் ஆதாரமுமாக இருப்பன பொருள்களைப் பற்றி நாம் கொண்டிருக்கின்ற கருத்துக்களேயாம் என வற்புறுத்தினர் என்பதை முன்னரே யிங்குக் கூறியிருக்கின்றோம். ஆம், இக்கருத்திற்குத் தொடர்புரிமையுடைய பொருள்கள் எப்பொருள்கள்என்றுவினவலாம். மனமானது அபிப்பிராயத்தைத் தானே தன்னிடத்தினின்றே பிறப்பித்துக்கொள்கின்றதென்றும் மற்றுஅறிவோ மனத்திற்குக் கொடுக்கப்படுகின்றவொன்றென்றும் ப்ளேடோகருதினர். ஆதலின் இதன்படி, பாவனைகள் நமக்குக்கொடுக்கப்பட்டனவாம்;நம்முடைய கருத்துக்களோ அவைகளின் பிறப்பிற்கு ஆதாரமாயிருக்கின்றமெய்ம்மைகளுக்கு ஏற்றவாறுஅமையும்.

மற்று, நிமிடந்தோறும் மாறியவண்ணமேயிருக்குமிந்தப்புலனுலகத்தினிடையேபாவனைகள்நடமாடக் காண்கிலோம்; பாவனையுலகம் எதனோடும் நமக்குப் போக்குவர்வில்லை; எனின்,அவைகள் நமக்குத் தெரியவரலாவது எங்ஙனம் என்னும் சங்கை விளைவது இயற்கையே. மெய்ம்மையால் நமக்குக்கொடுக்கப்படுவன கருத்துக்கள் என்றும்,அக்கருத்தினைச்சார்ந்து எழுவதே மெய்யறிவென்றும் விளம்பிய ப்ளேடோ, அம்மெய்ம்மை நமக்குத் தெரியவரலாகின்ற விதத்தைப்பற்றியும் விளக்காமல் இருக்கவில்லை. ஞாபகம் அல்லது நினைவு என்னும் நலத்தினால் நாம் மெய்ம்மையின் கருத்துக்களை எய்தக்கூடியவர்களாயிருக்கின்றோம் என்கின்றார் அவர். இப்பிறவி எடுப்பதன்முன் நாம் இருந்தவொரு நிலையில் இப்பாவனைகளை நேரே அறிந்து சிந்திக்கக்கூடியவர்களாயிருந்தோமென்றும் பிறகு இந்தப் பிறவியெடுத்து, மடிதலும்மாறுதலுமுடையஇவ்வுலகில் ஆழ்ந்திருக்கும்போது, அப் பாவனைச்சிந்தனைகளை மீண்டும் மனதிற்கு வரவழைத்துக் கொண்டு ஞாபகப்படுத்திக்கொள்கின்றோம் என்றும் ப்ளேடோசாற்றுகின்றார்.இதன்படி, வேறு வேறாகிய மூன்று உலகங்களுக்குமிடையே உள்ள வேற்றுமையை நாம் உணரலாம். ஒன்று தோற்ற உலகம், மற்றது கருத்துலகம், மூன்றாவது பாவனையுலகம். புலன்களுக்கு எட்டாத பாவனைகளின் மனப்பிரதிமைகளே கருத்துக்கள் என்றும், புலனுக்கு எட்டுகின்ற தோற்றங்கள் அவைகளின் மெல்லிய நிழல்களேயாமென்றும்சொல்கின்ற ப்ளேடோவின் இக்கொள்கை மனிதர் தம் வாழ்க்கையில் மனஞ்செலுத்தி வாழ்வதற்கு அறிந்துகொள்ளப்படவேண்டுபவைகளில் மிகவும் முக்கியமானதாம். ஐயறிவிற்கும்மெய்யுணர்விற்கும் உள்ள இவ்வேற்றுமையை வற்புறுத்தி, அதன்படி, பாவனைகளைப் புலனுலகினின்று பிரித்து, மனத்தில் நிகழும் இக்கருத்துக்களை மெய்யே புறத்துள்ள பிரபஞ்சப்பொருள்களாகச் சமைப்பதனால், வெளியுலகங்கள் இரண்டு ஒன்றன்மேல் ஒன்று அடுக்கப்பெற்றுநிற்கின்றன. உணர்தற்குரிய மெய்ம்மையுடையதாய், அறிவுடைய கருத்தில் அமையக்கூடியதாய், ஒழுங்கும்நன்மையும் பொருந்தியிருக்கின்ற இராஜ்ஜியம் ஒன்று; மற்றது, தோற்றத்தினளவிதாகிப் பலதிறப்பட்டு ஒழுங்கின்றிக் குறைவுற்றிருக்கும் உலகமாம்.இப்பின்னையஉலகம், நம்மனத்தினின்றிப் புறத்திலிருக்கும் உண்மையுலகமாவதை அயிர்க்காமல் அயராமல் மாந்தர் விவகரிக்கின்றனர். மற்றைய மெய்ம்மைஇராஜ்ஜியமும் இப்படியே நமக்குப்புறத்திலிருக்கும் இராஜ்ஜியமே என்ற நிச்சயத்துடன் விவகரிக்கக் கூடியவர்களாவது யாதினும் அவசியமாகும் என்று ப்ளேடோ வற்புறுத்துகின்றார். மெய்ம்மையாம்இப் பாவனையுலகம் நம்முடைய மனதில் மாத்திரமன்றி வெளியிலும் இருக்கின்ற நிச்சயமுடையது என்னும் ப்ளேடோ நமது மனத்தின் திறமே அதனிற்கு ஆதாரமாயிருக்கின்றதுஎன்னும்நுட்பத்தை மறக்கவில்லை, மறக்கவும் இல்லை; மற்று, ஆன்மாவிற்கும் உடலிற்கும்உள்ளவேற்றுமையையே இதனால் வற்புறுத்திக் காட்டுகின்றார். புலனுலகம் தன்னளவு வெளியாகி நிற்கும் நிலையுடையதாயிருத்தல் உடல்வாழ்க்கைக்கு நிச்சயமாவதுபோல், ஆன்ம வாழ்க்கைக்கு இப் பாவனையுலகம், வெளிப்பட்ட நிலையையுடைய நிச்சயம் வாய்ந்ததாயிருக்கின்றது. இவ்வான்மா அகத்தைச் சேர்ந்த ஒரு செய்தியாகையால், பாவனையுலகின் புறநிலையினோடு அதன் அகத்துறு தன்மையும் ஒருங்கே கொள்ளப்பட வேண்டும் என்று ப்ளேடோ குறிப்

199206



பது அவரது சிறந்த அறிவினது நுட்பத்தைக் காட்டுகின்றது.

அப் பாவனையுலகத்தைப்பற்றிய அறிவு நமக்கு எங்ஙனம் வாய்க்கின்றது என்ற கேள்விக்கு, இந்தப் பிறவி யெடுப்பதன்முன் நாம் இருந்த ஒரு நிலையில் எய்திய சிந்தனைகள், இப்பிறவியில் தொடர்ந்து வருகின்றஞாபகத்தாலேயே அந்நன்னலத்தவர்களாகின்றோம் என்று ப்ளேட்டோ பதிற்கூறினாரென்பதைச் சிறிதுமுன் இங்குச் செப்பினோம். பண்டையவொன்றை ஞாபகப்படுத்திக்கொண்டுவருகிறதென்னும் இக்கொள்கை நிலைபெற, நிரந்தரமான ஆன்மாவொன்று இருக்கவேண்டுமென்பது அவசியமாகின்றது. இல்லையேல் எதனைத் தொடர்ந்துவரும் இஞ்ஞாபகம்?

உடலின் இணக்கமே ஆன்மா வென்ற உரையை அடியுடன் மறுத்து, தன்னிலையில் தானே இயங்குகின்ற தத்துவமே ஆன்மாவென்பதை ஐயமற ப்ளேடோ அறைகின்றார். கண்டறிவதும் துணிந்தெழுவதும் இச்சிக்க வல்லதுமாகிய இவ்வான்மா என்னும் இது மனிதனுள் இருக்கின்றவோர் அம்சம் என்னவும், இம்மூன்று தொழில்களுக்கும் ஏற்க, அறிவு துணிவு ஆசை என்ன மூன்று பாகங்களையுடையதென்றும், அறிவான்மா தலையிலும் துணிவான்மா இருதயத்திலும் ஆசையான்மா வயிற்றிலும் இடம் பெற்றிருக்கின்றனவென்றும் சாற்றுகின்றார். இவைகளில், அறிவான்மா மாத்திரமே, அழிவற்றது சுவயசித்த முடையது கடவுளால் படைக்கப்பட்டது; தொடர்ந்துவருகின்ற பற்பல பிறவிகளில் புதுப்புது உடல்களைக்கொண்டு, ஆசையை அறிவால் மெல்ல மெல்ல வென்று இறுதியில் சுத்த ஆன்மாவாகிவிட வல்லதென்பது ப்ளேடோவின் கொள்கை. இவ்வறிவான்மா உடலில் இடம்பெற் றிருப்பதால், மாறிய வண்ணமாயிருக்கும் தோற்றங்களாகிய புலனுலகிற்குக் கட்டுப்பட்டிருக்க நேர்ந்ததாயினும், அதுதனது ஞாபகத்திறமையால் பாவனையுலகில் வாழவல்லதாகியும் இருக்கிறது. இப்பாவனையுலக நினைவினாற்றான் அது உய்தல்வேண்டும். இது ப்ளேடோவின் முடிவு. ஐயுணர்வின் அபிப்பிராயங்களால் ஒரு பயனுமில்லை. அந் நினைவாம் மெய்யுணர்வே உய்யுந் திறம்.

இதன்படி ப்ளேடோ,பிரபஞ்சத்தை என்னவாறு கருதலானார் என்பதை அறிந்துகொள்வது அருமையன்று. இப்பிரபஞ்சம், உயிரும் ஒரு நோக்கமும் அற்றதா யெந்திரம்போல் சும்மா சுழன்றுகிடப்பது ஒன்று அன்று என்றும், மற்று, ஒரு பெரும் நோக்கத்தைச் சாதித்திடவேண்டுமென்கின்ற கருத்துடன் செல்கின்றதென்றும் இயம்புகின்றார். அந்த நோக்கம் அல்லது அம்முடிவுதான் "நன்மை" எனப்படுவதென்றும் அதனைக் குறிக்கொண்டே படைப்பெல்லாம் நடக்கின்றன வென்றும் அவர் கூறுகின்றஇது நம்முடைய வாழ்க்கை பண்பும் பயனுமுடையதாம்படி ஒருமுகப்படுத்த இணையற்ற உதவியாம். படைக்கப்பட்டுள்ள இப்பிரபஞ்சம் அனைத்தும் ஒரு 'நன்மை' நாடி நடக்கின்றது எனின், இந்நன்மையை எங்ஙனம் நாம்அறிவதுஎன்றகேள்விக்கு ப்ளேடோ அழகியதோர் விடை நுண்ணிதின் தேர்ந்து ஓர் உதாரணவாயிலாகச் செப்புகின்றார். சூரியன் எல்லாவற்றையும் விளைவிப்பதன்றியும்,தன்னையும், தான் விளைவிப்பதையும் தானே தெரியக்காட்டுவதுமாய் நிற்பது போல, இந்நன்மையானது மெய்ம்மையனைத்திற்கும் பிறப்பிடமாகி, பிறந்த அம்மெய்ம்மையையும் பிறப்பித்த தன்னையும் தெரியக்காட்டும் ஒரு தத்துவமாம் என்கின்றார் அவர். இன்னணம், மெய்ம்மைக்கும் நன்மைக்கும் உள்ள தொடர்பினை உய்த்து உணருங்கால், கம்பர்' "மெய்ந்நெறி நன்மையன்' என்று கடவுளை அழைத்திருப்பதன் அருமையும் பெருமையும் புலப்படும். வாழ்க்கையுள் ஓர் ஊக்கத்தைப் பாய்ச்சுகின்ற வற்றாத ஊற்றாக அமைகின்றவர் ப்ளேடோ அனைய பெரியோர். அன்னவர்களைப் பேணிக்கொள்வோம் என்னும் நோக்கு வாய்க்கும் பொருட்டுத் தவங்கிடத்தலே நம்மனோர் கடன்.

---

# அணியிலக்கணம்

[87-வது பக்கத் தொடர்ச்சி]

## 2. தன்மை யணி

[ஸ்வபாவோக்தி யலங்காரம்]

முன்னே நிகழ்ந்ததையேனும் பின்னே நிகழப்போவதையேனும் இப்பொழுது கண்முன் நிகழ்வதுபோலக் காணும்படி பிரத்யக்ஷப்படுத்தி அதி அற்புதமான விஷயமாக வருணித்துச்சொல்லுதல், பிரதாபருத்ரீயம் முதலிய சில நூல்களின்படி பாவிக அணியாகும் என்றும், இவ்விலக்கணத்திற்கு இணங்கும்போது நிகழ்வின்நவிற்சியணி என்னும் பெயர் அதற்கேற்றதாகின்றது என்றும்கூறினோம். இனி, தன்மைநவிற்சியணியின் இலக்கணத்தைக்கற்கலாம். தன்மையணி யெனினும் தன்மைநவிற்சியணி யெனினும் ஒக்கும்.இவ்வணியை வடமொழியில் ஸ்வபாவோக்தி யலங்காரம் என்பர்.

நிகழ்வின் நவிற்சியணியும் தன்மைநவிற்சியணியும், ஒன்றினை நேரிற்பார்ப்பதுபோல் தோன்றும்படி வருணிக்கின்ற வருணனைத் திறமையால் பிறப்பனவாம். ஆயினும் ஒரு நிகழ்ச்சியை அவ்வாறு வருணிப்பது நிகழ்வின் நவிற்சியணி யென்றும், ஒரு பொருளினை அவ்வாறு வருணிப்பது தன்மையணி யென்றும் அழைக்கப்படுகின்றன. அது, காலத்தைப் பற்றியது; இது, பொருளைப் பற்றியது.

எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்
சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்.

என்பது தண்டியலங்கார சூத்திரம். எவ்வகைப் பொருளும் அதற்குரிய இயற்கையின்படி தோன்றுமாறு சொற்கொண்டு வருணிப்பது தன்மையணி ஆகும், என்பதுஇதன் கருத்து,மெய்வகை விளக்குவதாவது (உள்ளது உள்ளபடியே) ஒன்றன் இயல்பை விளக்[illegible] வைப்பதாம். எனினும், ஒன்றன் இயல்பினைஉள்ள[illegible]

உள்ளபடியே விளக்கிய அளவில் தன்மைநவிற்சியணி தோன்றிவிடுமென்றுஎண்ணலாகாது. அவ்வருணனை அழகாகவும் கண்முன்னே தோன்றுவது போலவும் அமைந்தபோதுதான், தன்மை நவிற்சியணி உண்டாகும். "ஸ்வபாவோக்தி ரஸௌ சாரு யதாவத் வஸ்து வர்ணனம்" என்று ப்ரதாபருத்ரீயத்தில் கூறப்பட்டிருக்கின்ற இலக்கணம் சாலப் பொருத்தமுடைத்து. இல்லையேல், "இரண்டு கண்களும் இரண்டு சிறகுகளுமிரண்டு கால்களும் ஒரு வாலும் உடைய ஒரு கிளி மரக்கிளையில் உட்கார்ந்திருந்தது" என்பது போல் வருவனவெல்லாந் தன்மைநவிற்சியணியே யென்று அழைக்கப்படுவதற்கு உரியதாகிவிடும். இதற்கெதிர்,

பொன்னிறத் தூவிப் பவளவாய்ச் செங்காற்
பொற்புறு பசியசூட் டரச
வன்னமெய் யுதறிச் சிறையுளர்ந் தயல்சூழ்
அனக்குழாத் திடைவதி தரலும்

—நைடதம்: அன்னத்தைத் தூதுவிட்ட படலம், 2.

[பொன்போன்ற ஒளியுடைய இறகையும்,பவளத்தைப் போன்ற வாயையும் சிவந்த கால்களையும் அழகிய பசுமையான கொண்டையையுமுடைய அரசஅன்னமானது, தன் உடம்பைச் சிலிர்த்து உதறி, சிறகுகளை முக்கினுல் கோதிக் கொண்டு, தன்னைச்சூழ்ந்த மற்ற அன்னங்களின்கூட்டத்தினிடையில் தங்கிய வளவில்.]

என்று, அதிவீரராமபாண்டியன், நளனது கைகளிலிருந்து விடுபட்ட அன்னத்தை வருணித்திருப்பது அப்பறவையின்தோற்றம் அதன் சாதியின் இயற்கை முதலியவைகளை அழகுறநம் கண்முன் கொணர்ந்து காட்டுவதுபோல் தோன்றுவதால், இதனையும் இதனைப் போன்ற வருணனைகளையுமே தன்மை நவிற்சியணியென்னலாம். இதுவுமன்றி,

வழுவா மரபினெப் பொருளையும் விகாரம்
தழுவா நடைபெறப் புணர்ப்பது தன்மை

என்று மாறனலங்காரம் கூறும் இலக்கணத்தையும் கருதுங்கால், வருணிக்கப்படுவது குற்றமற்றதாகவும் உயர்ந்ததாகவும் இருக்கவேண்டுமென்பதும் ஏற்படுகின்றது. ஆதலால்,

இப்பிறப்பை நம்பி யிருப்பரோ நெஞ்சகமே [ல்
வைப்பிருக்கவாயின் மனையிருக்கச்—சொப்பனம்போ
லிக்கிப்பற் கிட்டக்கண் மெத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு

—பட்டினத்தார் பாடல்

என வருகின்ற இச்செய்யுளில் மரணவேதனையின் இயல்பு உள்ளது உள்ளவாறே உரைக்கப்படிருக்கின்றதாயினும், அவ்வருணனையின் அமைதியால் அது வியப்பு விளைக்கின்றதேனும்,இதுவனைய அழகில்லாச் செய்திகள் தன்மைநவிற்சியணிக்கு ஆதாரமாக நிற்க மாட்டா. அன்னவாறே, சீத்தலைச் சாத்தனர், மணிமேகலையில், இடுகாட்டை இயற்கையுற வருணித்திருக்கின்ற அடிகளையும், இவ்வணியினிற் சேர்க்கலாகாது:—

என்புந் தடியு முதிரமு மியாக்கையென்
றன்புறு மாக்கட் கறியச் சாற்றி
வழுவொடு கிடந்த புழுவூன் பிண்டத்
தலைத்தக மூட்டிய வடிநரி வாய்க்கொண்
டலைப்பி லின்பமோ டுளைக்கு மோதையுங்
கலைப்புற வல்குல் கழுகுகுடைந் துண்டு
நிலைத்தலை நெடுவிளி யெடுக்கு மோதையுங்
கடகஞ் செறித்த கையைத் தீநாய்
உடையக் கவ்வி யொடுங்கா வோதையும்
சாந்தந் தோய்ந்த வேந்திள வனமுலை
காய்ந்தபசி யெருவை கவர்ந்தூ ணோதையும்
பண்புகொள் யாக்கையின் வெண்பலி யரங்கத்து
மண்கணை முழவ மாக வாங்கோர்
கருந்தலை வாங்கிக் கையகத் தேந்தி
இரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள்
புயலோ குழலோ கயலோ கண்ணோ
குமிழோ மூக்கோ விதழோ கவிரோ
பல்லோ முத்தோ வென்னு திரங்காது
கண்தொட் டுண்டு கவையடி பெயர்த்துத்
தண்டாக் களிப்பி னாடுங் கூத்துக்
கண்டனன் ......... ......... .........

—மணிமேகலை:சக்கரவாளக்கோட்டமுரைத்த காதை: வரி 107—127.

[அந்தச்சுடுகாட்டில் - உடம்பினிடத்தில் அன்புவைத்த மக்களுக்கு,இந்தயாக்கையானது, எலும்புந்நிணமும் இரத்தமுமேசேர்ந்து ஆகின்றதென்பதைத் தெரியச்சொல்லுவதுபோல், வழுவிக்கிடந்த, புழுத்த ஊனுலாகிய உடலத்தின், செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய கால்களை நரிகள் வாயில் கவ்விக்கொண்டு குறைவற்றஇன்பமுடன் கூவுகின்ற ஓசையும், மேகலையைப் புறத்தே அணிகின்ற அல்குலைக் கழுகு குடைந்து உண்டு அவ்விடத்தில் பெரிய கூப்பாடு செய்கின்ற ஓசையும், கடகங்கள் அடுக்கியிருந்த கைகளை மயானத்திலுள்ள நாய் உடைத்துக் கவ்வி ஓயாது செய்யும் ஓசையும்,சந்தனம்பூசியிருந்த நிமிர்ந்த இளமைபொருந்திய அழகிய முலைகளை மிக்க பசியுடைய கழுகுகள் கவர்ந்து உண்ணும் ஓசையும், அத்தகைய தன்மைவாய்ந்த உடலை எரித்த சாம்பற் குவியலில், ஒரு பேய்மகள், ஒரு பெண் பிணத்தின் தலையைத் திருகி எடுத்து, மார்ச்சனையமைந்த மத்தளமாகக் கைகளில்ஏந்திக்கொண்டு மிக்கமகிழ்வினோடெழுந்து,இது மேகமோ அல்லதுகூந்தலோ,கயல்மீனோ அல்லது கண்ணோ,குமிழ மலரோ அல்லது மூக்கோ, உதடுகளோ அல்லது முருக்கம் பூவோ,என்னக் கருதாமலும் இரங்காமலும், அக் கண்களைத் தோண்டித் தின்று தன் பிளவுடைய கால்களைஎடுத்தெடுத்துவைத்துக் குறையாத களிப்போடு ஆடுங் கூத்தை (சார்ங்கலன்) என்பவன் கண்டனன்.]

சுடுகாடென்னும் ஒரு இடத்தின் தன்மை இங்கு இன்னவாறு நவிலப்பெற்றுஇருக்கின்றது. ஆயினும் வெறுத்து அஞ்சுதற்குரிய வொன்றின் வருணனையேயிதுவாகையால், உள்ளது உள்ளவாறே உரைக்கப்பெற்றிருக்கின்ற திறமை தோன்றுகின்றதெனினும், இதனைத் தன்மைநவிற்சியணி யென்று கூறலாகாது. இதற்கெதிர்,திருவிழா நடைபெறுகிற ஒருவீதியின் சிறப்பை இயற்கையுறப் பின்வருமாறு அச்சீத்தலைச் சாத்தனரே வருணித்திருக்கின்ற அடிகள், உயரியவொன்றை உட்கொண்டு அதன் இயல்பினை அழகுறக்கூறலால் தன்மைநவிற்சியணிக்குஇடமாகின்றன.

விழவாற்றுப் படுத்த கழிபெரு வீதியிற்
பொன்னுண் கோத்த நன்மணிக் கோவை



யையவி யப்பிய நெய்யணி முச்சி
மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ்
பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்
செவ்வாய்க் குதலை மெய்பெறு மழலை
சிந்துபு சின்னீ ரைம்படை நனைப்ப
அற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகில்
தொடுத்தமணிக் கோவை யுடப்பொடு துயல்வரத்
தளர்நடை தாங்காக் கிளர்பூட் புதல்வரைப்
பொலந்தேர் மீமிசைப் புகர்முக வேழத்
திலங்குதொடி நல்லார் சிலர்நின் றேற்றி
ஆலமர் செல்வன் மகன்விழாக் கால்கோள்
காண்மி னோவென்னக் கண்டுநிற் குநரும்

மணிமேகலை - மலர்வனம் புக்க காதை- வரி132-145

[விழவு நடத்திய ஒரு மிகப் பெரிய வீதியில், பொன் நாணிற்கோத்த நன்மணிகளாலாகிய கோவையோடு,பேய் தீண்டி வருத்தாதபடி வெண் சிறு கடுகையும் நெய்யையும் அப்பியிருக்கின்ற உச்சியிலுள்ள மயிரில் சுற்றியிருக்கின்ற கொக்கியுடன் கூடிய மூன்று வடமாகிய முத்துமாலை, பொன்னுலாகிய பிறைவடிவமான ஆபரணத்தை அணிந்த சென்னியில் அழகுபெறத் தாழவும், குதலைச் சொற்களையும் உருவம்பெறாத மழலைச் சொற்களையும் பேசும்சிவந்தவாயிலிருந்து எச்சிலானது சிந்தி, கழுத்திற் கட்டியிருக்கின்ற ஐம்படைத்தாலி என்னும் ஆபரணத்தின்மீது வழிந்துநனைக்கவும், மறைக்கவேண்டிய பாகத்தை மறைக்காமல் ஒப்புக்குச் சுற்றியிருக்கின்ற மெல்லிய ஆடைமீது கட்டியிருக்கின்ற இரத்தினக்கோவை உடுப்போடு அசையவும், தளர்கின்ற நடை தாங்கமாட்டாமல் பிரகாசிக்கின்றஆபரணங்களை அணிந்திருக்கின்ற தம்சிறு பிள்ளைகளை,பொன்னுலாகியதேர்மீதுசெய்துவைத்திருக்கின்ற புள்ளிகளையுடையமுகமுடைய யானைகளின்மேல், பிரகாசிக்கின்ற வளையல்களையணிந்த மாதர்சிலர் ஏற்றி, 'சிவபிரான் மகனுன முருகக்கடவுளின்திருவிழா நடப்பதைப் பாருங்கள்' என்று சொல்லிச்சொல்லிஅதனைத் தாம் பார்த்து நிற்பவர்களும்.........]

மாதர்கள்தம் சிறுவரைச்சிங்காரித்துத்தேரின்மீது அமர்த்திவீதியில்திருவிழாக்காட்டுகின்றதன்மை இங்கு அழகுற வருணிக்கப்பெற்றிருக்கின்றது.மக்கள் வாயினின்று எச்சில் மாலையாக ஒழுகுவதும், அவர் அரையில்கட்டியிருக்கின்றசிற்றுடை மறைக்கவேண்டிய இடத்தை மறைக்காமல் விரிந்திருப்பதும், 'வேடிக்கை பாருங்கள்' என்று மக்களுக்குக் காட்டுவார் போல், அம்மாதர் தாமே கருத்துடன் கண்டு நிற்பதும் ஆகிய இன்ன செய்திகள் இயற்கையுற இங்கு உரைக்கப்பெற்றிருப்பதால் இவ்வருணனை தன்மை நவிற்சியணி கொண்டு சிறக்கின்றது.

ஆதலின்: பாராட்டுதற்குரிய வொன்றினை, வேறு அணிகளின் உதவியின்றி, அதன் இயல்பினது நுட்பங்கள் அழகாக அமைந்து தோன்ற, கேட்போர் மனம் கிளர்ந்து உவக்கும்படி வருணித்துப் பாடும் திறமை தன்மைநவிற்சியாகும். உள்ளதை உள்ளவாறே வருணிக்கவேண்டுமென்பது இவ்வணிக்குரிய விதியாயினும், 'உள்ளது' என்னும் அச்சொல் இம் மண்ணுலகில் நம்முடைய அறிவிற்கும் அனுபவத்திற்கும் எட்டியிருப்பவைகளை மாத்திரமே குறிக்கின்றது என்று கொள்ளலாகாது. கவிதையுலகில் உள்ளனவும் உள்ளவைகளே. போரிற்கு எழுகின்ற படைவீரர்களின் தோற்றம் குணம் தொழில் அவர் சாதித்தன்மை முதலியவைகளை, கவிச்சக்ரவர்த்தியாகிய ஜயங்கொண்டார், கலிங்கத்துப் பரணியில் பின்வருமாறு வருணித்திருக்கின்றார்—

அலகில் வெற்றியு முரிமையு மிவையென
அவய வத்தினி லெழுதிய வறிகுறி
அவையெ னப்பல வடுநிரை யுடையவர்
அடிபி றக்கிடி லமரர்த முலகொடிவ்
வுலகு கைப்படு மெனினும தொழிபவ
ருடலெ மக்கொரு சுமையென முனிபவர்
உயிரை விற்றுறு புகழ்கொள வுழல்பவர்
ஒருவ ரொப்பவர் படைஞர்கண் மிடையவே

—கலிங்கத்துப்பரணி—காளிக்குக் கூளி கூறியது. 12.

[அளவற்ற வெற்றியும் தம் உரிமையும் இவைதாம் என்று அவர்உடல்மீது எழுதிவைத்திருக்கின்ற அறிகுறி எனச் சொல்வன போன்று, முன் போர்களில் பட்ட புண்களின் வடுக்கள் வரிசை வரிசையாய்த் தோன்றப் பெற்றவர்; போரில் ஒருஅடி பின்னெடுத்து வைத்துவிட்டால், தேவலோகத்தோடு இவ்வுலகும் கிடைக்கு மென்றாலும், முன்சென்று மாள்வதன்றி,தம் வீரம் பழுதுபட ஒருபோதும் அடிபின்னிடாதவர்; தம்உடல் தமக்கு ஒரு சுமையே என்று வெறுப்பவர், தம்உயிரைவிற்று மிக்கபுகழை வாங்கிக்கொள்ளும் ஆவலுடன் திரிபவர்; இத்தகைய படைவீரர் ஒருவரைப்போல்அனைவரும்அமைந்த படைஞர்கள் நெருங்கவே]

இவ்வருணனையின்படி போர்வீரர்களுக்கு 'இருக்கவேண்டிய' இயற்கையே இது என்று நாம் கூறுவோம். கூறி இப்படியும் 'இருப்பார்களோ' என்று ஐயுற்று, உளதாக வேண்டியதை வருணித்ததேயன்றி இது, 'உள்ளதை' வருணித்தபடியாகுமோ வென்று வினவலாம். இதுதான், நமக்கும் கலைநலம் மலிந்த புலவர்களுக்கும் உள்ள வேற்றுமை. இருப்பதையே அயிர்க்கின்ற நாம் கிடக்க, இருப்பதற்குரியவைகளையும் இருப்பனவாகவே கொண்டு விவகரிப்பார் புலவர். ஆதலில் அன்னவர் புலமையின்படி உள்ளனவே அவை. அன்னவாறு உள்ளதை உள்ளவாறு வருணித்தமையால் அதுவும் தன்மைநவிற்சி யணியே. புறநானூற்றில் காணப்படுகின்ற, கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதியின் பாட்டொன்று இத்திறத்தில் நல்ல உதாரணமாகும்.

உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே

[இந்திரனது அமிர்தம் தமக்குக் கிடைத்தாலும், இது மிக்க இனியதாதலின் தாமே உண்ணவேண்டு மென்று அவாவிப் பிறர்க்குப் பகிர்ந்துகொடுக்காமல் உண்ணுதவர்; கோபமில்லாதவர்; மற்றவர்செய்யஅஞ்சி விட்டவைகளைத்

தாழும் செய்வதற்கு அஞ்சினவர்களாய்ச் சோம்பிக் கிடக்காதவர்; புகழ்வருமாயின் உயிரையுங் கொடுப்பவர், உலகமே கிடைப்பதாயின் அதனைப்பெறுவதில் பழியும்சேர்வதாயிருந்தால் அதனைக் கொள்ளாதவர்; அயர்வு இல்லாதவர். அத்தகையமாட்சியோடு அன்னவர்களாகித் தமக்கென்று ஒருபோதும்முயலாமல்பிறர்பொருட்டேவிடாமுயற்சியை மேற்கொள்பவர் இருப்பதாலே இவ்வுலகம் இன்று நிலைபெற்றிருக்கின்றது]

இத்தகைய மாட்சியை உடையவர்கள் இருப்பது இளம்பெரு வழுதிக்கு உண்மை; அவ்வுண்மையை அவன் உள்ளவாறு வருணித்து உளறுதலின் இது தன்மைநவிற்சி யணி.

குணம் தோற்றம் முதலியவைகள் புலவர்க்கியன்றபடி உள்ளவாறு வர்ணிக்கப்படுந் திறமையால் உண்மையாக விளங்குவதுபோலவே ஏனைய செய்திகளும் விளங்கலாம். சிவபிரான் உமாதேவியின் கண்களுக்கு மையிட்டஅழகினைக் காளிதாஸன், குமாரஸம்பவம் என்னும் நூலில் பின்வருமாறு வருணித்திருக்கின்றான்:—

நீர்ச்சடைப் பண்ணவன் நெற்றிக் கண்ணினின்
றார்சுட ருதிர்த்துமை திரட்டிப் பைப்பையப்
பார்வதி கண்களிற் பரிந்து பூசித்தன்
கார்நிறக் கழுத்தினிற் கையைத் தீட்டினன்.

—குமாரஸம்பவம் - 9வது ஸர்க்கம். சுலோகம் 26.

[கங்கையைத் தரித்த சடையையுடைய சிவபிரான், தன் நெற்றிக்கண்களில் தவழ்கின்ற தீச்சுடரைத் தட்டி அதனின்று மையைத் திரட்டி மெல்ல மெல்லப் பார்வதியின் கண்களில் பரிவுடன் இட்டு, பிறகு, தன்கையிலிருந்த மையை நீக்கும்பொருட்டுத் தனது கரியநிறம் அமைந்த கழுத்தில் அக்கையைத் துடைத்துக்கொண்டான்.]

விளக்கிலிருந்து சுடரைத்தட்டி மையைத்திரட்டிக் கண்களுக்குஇட்டுப் பிறகு அக்கையை அருகிலுள்ள சுவரில் துடைத்துக்கொள்ளும் இந்த இயற்கைக்கு இணங்கச் சிவபிரானும் நெற்றிக்கண்ணின் சுடரைத் தட்டி மையை எடுத்து உமாதேவிக்கு இட்டு, அக்கையைத் தன்கரியகழுத்திலேயே துடைத்துக்கொள்ளலானன்என்னும் இது, மையிடுவதென்னும் செய்தியை இயற்கை பிறழாமல் நுட்பமாக வருணிப்பதால் தன்மைநவிற்சி யணி. எனினும், சிவபிரானது நெற்றிக்கண் விளக்கு ஆகுமோ, அதனின்று மைதிரட்டக் கூடுமோ, என்றெல்லாம் ஐயுற்று, இதனை, உள்ளதை உள்ளவாறு வருணித்ததாக எவ்வாறு கருதுவதென்று தயங்கவேண்டா. புலவர்தம் உண்மை அது: அவ்வளவில் உள்ளவாறு வருணிக்கப்பெற்றிருக்கிறது. எல்லாவற்றையும் முழுமையாக நோக்கி ஒற்றுமைப் படுத்துகிற கவிதையுள்ளத்தின் கிளர்ச்சியே அணிகளின் உள்ளுறைப் பொருள். இவ்வகையில் இத்தன்மைநவிற்சியணி, இருப்பனவற்றையும் இருக்கக் கூடியவற்றையும் 'உண்மை'என்னும் கருத்தினில் ஒற்றுமைப்படுத்துகின்றது. புலவர்தம் ஆர்வத்திற் கேற்றபடி உண்மையும் அமையும்.

---

# சூளாமணி

4. இரதநூபுரச் சருக்கம்

[110-வது பக்கத் தொடர்ச்சி]

91. தீச்சுடர்க் கொழுந்து எரிய எரிய, அதனுள் வைத்துள்ள ஒளிவளர்பொன்கொடியும் சுடர்விட்டு விளங்கி மாற்றுக்கு மிளிர்கின்றது. குறைவிலா நிறைவாய் அமைந்த அழகே ஒரு கூந்தலேந்திய கொடியாக நின்றதுபோலும் இயற்கை யமைதி யுடையாள் இச்சயம்பவை. தான் மேற்கண்ட இவ்வரிய நோன்பினைச் செய்துவரச்செய்துவர, அழகியசுடர்க்கொடி (ஜ்வாலாலதா) ஒளிவிட் டொளிர்வதுபோல இயற்கையொளியோடு, நோன்பினால் உடல் தூயதாக ஒளிரும் திருமேனிப்பொலிவும் கொண்டு திகழ்கின்றாள். சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ் சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

92. இளமையை விளக்கும் மெல்லியபற்களையும் மென்மையாற்பின்னே தாழ்ந்து அவிழ்ந்துவிழும் கூந்தலையும் உடைய இச்சயம்பவை, பல்லென மொக்குவிட்டரும்பி ஒசியும் முல்லைக்கொடியையும் வருத்துகின்ற இளையவளாம் மெல்லியல் உடையாள். இத்தகையவள் மிக அரியதொரு நோன்பினை முனிவர் பெருமக்கள் ஓதியவழியே சிறிதும் பிறழாது செய்துமுடிப்பவளோ! இவள் செய்து முடித்தலின் இந்நோன்புகள் ஓர் உயர்வே பெற்றன. உள்ளத்தே குற்றமின்றிக் குணத்தால் மாட்சிமை யுற்றோர்க்கு அரியதொன்று உண்டோ! வேண்டிய வேண்டியாங் கெய்துப வேண்டியார் திண்ணியா ராகப் பெறின்; பெருமையுடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமையுடைய செயல்.

93. கடுநோன்பு செய்து இந்திரவுலகம் பெற்றோரும், இந்நோன்பினைக்கண்டு 'ஆ, என்ன அரிய நோன்பு! இதனை ஒரு பெண்மகள் இயற்றுவதே' என்று மிகவியந்து வணங்குகின்றனர். அத்தகைய பெருமையுடையது இந்நோன்பு. அருகப் பெருமானது திருநூலில் அவர் திருவாய்மலர்ந்தருளியது போலவே ஈண்டுச் செய்யப்பெற்றது. அதனால் முறுகிவளர்ந்த இவளது திருமேனிப்பொலிவு எங்கும் மிளிர்கின்றது. மந்திரத்தோடு நறுநெய் கொண்டு பசுக்கொலை முதலிய மாசு படாதபடி வளர்க்கின்ற வேள்வியிலிருந்து வலஞ்சுழித்து எழுந்து வான்வரை யோங்கும் தீக்கொழுந்தேபோல, இச் சயம்பவையும் நோன்பினால் ஒளிவளர்ந்தோங்கி இந்திரனையும் வணக்குகின்றாள்.

94: தவவொழுக்கமுடையோரா லன்றி மற்றையோரால் பொறுத்தற்குஅரிய இத்தகைய பேரொளிவடிவாகத் திகழுகின்ற சயம்பவை, சக்கிரவாளம் என்று உயர்த்திப் பெருமையோடு எல்லோரும் கூறிவரும் இந்நோன்பினை இந்நோன்பே இவள் செய்வதால் ஒருயர்வு பெறுமாறு, இங்ஙனம் நோற்று முடிக்கின்றாள். தீங்கரும் பனையசொற் சிறுமி, அச்சொற்களைக் கொண்டு, கடவுளைப்பாடி அப்பெருமானுக்குப் பெருஞ் சிறப்புச்செய்ய விரும்புகின்றாள்.

95. கண்டோர் கண் குளிர வெள்ளிய நிலவைப் பொழிந்து எல்லாப்புறத்தும் சுடர்விட்டொளிர்கின்றது அந்த வெள்ளிமலை. அதன்மேல்மிளிரும் கொடுமுடியில், அருகப்பெருமான் திருக்கோயில் ஒன்று அதோ தோன்றுகிறது! அரசர்பெருமானின் திருப்



புதல்வி, அங்கே, ஆண்டவனை வழிபட்டுப் போற்றுகின்றாள். அதுகேட்டு இமையவரும் மனமகிழ்கின்றனர். அவ்வளவு கருத்தாழமும் சொல்லினிமையும் கொண்டனவாகும் அவள் பாடும் பாக்கள்.

96 "கடவுட்டன்மை பெற்றவர்கள் முதல்வைத்தெண்ணத்தகும் பெரியோய் நீ! அரிய மறைகளை அருள் காரணமாக ஓதியவன் நீ! கடவுளறிவிற்கே உரிமை பூண்டோனும் நீ! பூமேல் நடந்த புதுமையுடையானும் நீ! அறிவின் கிழவனும் அருமை என்னே! பூமேல் நடக்கும் புதுமை என்னே! சோதியஞ் செல்வ, இப்பெருமைகண்டு நின் திருவடியில் அடியேங்கள் இயல்பாகவே வணங்குகின்றோம்.

97. காமனை வென்றாய் நீ! காமனைக்கடிந்து இறப்பில்லா துயர்ந்தோய் நீ (எம் மனத்தையும் கடந்து நின்றன அந்நிலைகள்)! உலகம் முழுவதும் தேமலர் மாரிபொழிய வீற்றிருக்கிற பெருமான் நீயேயன்றோ. திருவெனும் மறுவினை மார்பகத்தே கொண்டு விளங்கும் அழகிய திருமேனியுடையானும் நீயேயன்றோ, (இவை எம் மனத்தைக் கவர்கின்றன)! நீ தேமலர் மாரியிடையே வீற்றிருக்கும் பொலிவை என் என்போம். திருமறு மார்பனுப் பொலியும் நின் அழகை என் என்போம். அழகிய தாமரையேபோல ஒளிருந் திருமேனிப் பொலிவுடைய எம்பெருமானே நின் மலரன்ன திருவடியில் அடியேங்கள் வணங்குகின்றோம்.

98. அனைத்துயிரிடத்தும் அரியதோர் அருள் கொண்டு அருண்மொழிகூறி வழிகாட்டினை நீ. அந்நெறிநின்றார் இன்பமேயடைய அவர்களது ஆழ்துயர் அவித்தவன் நீ. இவை ஒன்றோ! ஒருசிலர் போலொருசில பொழுது அருள் அறம் பூண்டனையோ; அருளாழியாக ஒளிர்பவனன்றோ நீ. இவ்வுலகமும் உனக் கயலன்றே, உன்னுடைமையே யன்றோ! நீயயருள்செய்யா திருத்தலும் இயல்வதோ! இந்நிலையில் கடலாழிசூழ்ந்த உலகோ ஈது! நின் அருளாழிசூழ்ந்த உலகன்றோ. ஓரருளாழியனும் நின் அருட்பெருமை என்னே! உலகுடையொருவனுய் எங்களோடு குடல் துடக்குண்ட முறைமை என்னே!. உய்ந்தே-போய் விட்டோம் என்றோர் ஊக்கம் எழுகின்றது. சீரிய நின் அருள்மொழிகள் எங்கள்காதுகளில் ஒலிக்கின்றன. அத்தகையமொழிகளைக் கூறியருளிய பெருமானே, அடியேங்கள் நின் திருவடியை வணங்குகின்றோம்,'' என்று போற்றுகின்றாள். அரசன் முரணணி தோன்ற வியப்புற்று நிற்கின்றான். முனிவரர் இன்பமே வடிவாய அருகனது பெருமையைப் புகழ்ந்து நின்றனர். இப்பெருமாட்டி அன்பின் பெருக்கால், தான் கேட்ட அருகப்பெருமான்புகழைப் பன்னிப் பன்னிச் சொல்லியதேசொல்லியின்பமுறுகின்றாள். மடக்கிக் கூறும் அடிகளால், இவளது மனத்தைக் கவர்ந்தசெய்திகள் யாவையென நாம் அறிகின்றோம். முதற் பாட்டில் ஆண்டவனது அறிவுநிலையில் ஈடுபடுகின்றாள். இரண்டாவது பாட்டில் அவன் வீற்றிருந்தருளும் அழகுகண்டு கும்பிடுகின்றாள். மூன்றாம்பாட்டில் நம்மோடவனுக்குள்ள தொடர்பை எண்ணி, அவனுடைய அருள்வெள்ளத்தே மூழ்குகின்றாள்.

99. வடித்தெடுத்து நீண்டொளிரும் அழகிய ஒரு வேலில் கரிய நஞ்சையும் பூசிவைத்தாற்போலக் கண்டாரைமருட்டும் கண்ணுடையாள் இவ்வாறு திருக்கோயிலினுள்ளே வணக்கமே உடலாய் அன்பே யுயிராய் நிற்பதே! முனிவர்பெருமக்களும் வெருவியோடும் வினைப்பகையை வாராதே விலக்கும் இத்தகைய தனிச்சிறப்பு நிறைந்த கடவுள்மணம் கமழும் திருமொழிகளைக் கூறுவதே! இவ்வாறு கூறி அருகப்பெருமானை வழிபட்டு, அப்பெருமானுடைய திருவடிச் சேடத்தை வீறுபெறச் சூடிக்கொள்கின்றாள்.

100. விண்ணுலகத்துக் கடவுளர்க்கும்தலைவனை அருகப்பெருமான் தனது கடவுள் ஒளி விளங்குகிற செவ்விய திருவடிகளிற் சூடியருளியதால் செவ்வி மாறாமல் விளங்குகின்றதேனுயர் திருமலர்ச் சேடத்தைப் பெற்றபின், மான் என்னும் கண்ணியராகிய தோழியர் தன்னைச்சுற்றி நின்று இவ்வாறு நோன்பு நோற்றுயர்ந்தொளிரும் இவளதுதிருமேனிப்பொலிவைப் பாராட்டிப் பரவுகின்றனர். மங்கைப் பருவமடைந்த நங்கையும், அரசன் வீற்றிருக்கும் செல்வ வளங்களினாற் சீர்மைபெற்ற அரண்மனையினுள்ளே சென்று தந்தையைக் காணக் கருதுகின்றாள்.

---

## நம்மாழ்வார் வைபவம்

'திருவாய்மொழி

7-ம் பத்து, 3-ம் தசகம்.

[108-வது பக்கத் தொடர்ச்சி]

10-ம் பாசுரம்.

நகரமு நாடும் பிறவுந் தேர்வேன்
நாணெனக் கில்லையென் றோழி மீர்காள்
சிகர மணிநெடு மாட நீடு
தென்திருப் பேரையில் வீற்றிருந்த
மகர நெடுங்குழைக் காதன் மாயன்
நூற்றுவரை யன்று மங்க நூற்ற
நிகரின் முகில்வண்ண னேமி யானென்
நெஞ்சங் கவர்ந்தெனை யூழி யானே.

உரை:— நாடும்- உள்நாட்டிலும், நகரமும் - பட்டினங்களிலும், பிறவும் - மற்றவிடங்களிலும் வவிக்கும் ஜனங்கள், தேர்வேன் - தனித்துத் தன் நாயகனைத் தேடிச் சென்றாளென்றும், மட்டும் மரியாதையும் கடந்தாள் என்றும் அவமதிப்பாயும் நிந்தையாயும் பழிதூற்றி உரைக்கும் மாற்றங்களை இலக்ஷியம் செய்யாமல் தைரியப்பட்டிருப்பேன். நாண் எனக்கில்லை—லஜ்ஜையும் கூச்சமும் தோழிமீர்காள் நான் பாராட்டமாட்டேன். எம்பெருமானோடு கூடுவதற்குச் செல்லுதல் எனக்குக் கௌரவக்குறைவாகாது; ஊரவர்சொல்வதை நன்மதிப்பாகவே யான் கருதலாவேன்; இதுவே அல்லவோ எனக்கு உளது. ஆகையால் அவனும் வாராதிருக்க, ஊரவர் என்னை நிந்திப்பார்போல் உண்மையில் எனக்கேற்றமாகவே பேசும் நன்மொழிகளையும் இழக்கவோயோ நீவிர் கூறுகின்றீர்கள் தோழிமார்களே-என்கிறாள். அவன் என்ன அவ்வளவு உயர்ந்த தலைவனோ என்று கேட்டால் - திவ்விய ஸௌந்தரியமுள்ளவன், திவ்விய ஆபரணங்களாலும் வடிவழகிலும்சோபையிலும் மிஞ்சினவன், குணத்திலோ திவ்விய சேஷ்டைகளிலோ இணையில்லாதவன். தன் சுகிருதுக்களான பஞ்சபாண்டவர்க

ளுக்காகப் பாரதயுத்தத்தில் துஷ்டர்களான துரியோதனாதிகளைப் பிறர்க்கு அஸாத்தியமான பலவித சூழ்ச்சிகளால் தோல்வியடைவித்து உலகஹிதத்தைநாடினவன். என்னவானாலும், திடீரென்று தலைவனை நாடிச் சிறுபெண்கள் துணையின்றிச் செல்வார்களோ என்று கேட்டால் - இப்படி, தான் அவனுக்கு வசப்பட்டதும் தேடிச்செல்வதும் இப்போழ்தையசெய்தி அன்று என்றும், இப்பழக்கம் ஏற்பட்டு நெடுநாள் ஆகிவிட்டதென்றும் "ஊழியானே" என்கிற பதத்தால் சூசிப்பிக்கிறாள்.

குறிப்பு :—ஸ்வாபதேசத்தில், ஆழ்வார் எம்பெருமான் திறத்தில் ஈடுபடுவது இன்றைக்கு நேற்றைக்கு அன்று, மற்று, இது ஊழிதோறும் ஊழியாகவுள்ள ஸம்பந்தமென்று திருவுள்ளப்பட்டு உரைக்கிறபடி.

மாயன் - திருமால் ஸ்ரீகிருஷ்ணபகவானாக அவதரித்து ஆச்சரியமான திவ்விய ஸௌந்தரியத்தால் கண்டவர்கள் சித்தத்தைக் கவர்ந்துகொண்டவொரு ஆச்சரியம் மிகுந்த திவ்விய அழகுடையவன் என்று பொருளுரைப்பதுண்டு. இப்பாசுரத்திலேயே முகில் வண்ணன் நெஞ்சம் கவர்ந்தானென்கின்றார். மனுஷ்யர் தேவர் இவர்களாலுங்கூட இயற்றவொண்ணாத திவ்விய சேஷ்டைகளாலும் விசித்திர சரித்திர விபூதிகளாலும் தனது மனோஸங்கல்பத்தின் உதவியால் உலகங்கள் வியக்க அவைகளைப் பாதுகாத்து இரக்ஷித்தவனாகையால், முல்லை நிலத்தைச் சேர்ந்த ஆயர்கள் இவனை "மாயோன்" என்று பெயரிட்டே வழிபட்டு வந்தமை பற்றி "மாயோன் மேய காடுறையுலகம் (முல்லை நிலம்) எனச் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே" என, தொல்காப்பியனார் சூத்திரம் விதித்தார். இவ்விடத்தில் பகவானின் திவ்விய ஸௌந்தரியத்தை ஆபரண சோபையிலே சேர்த்து அநுஸந்தித்தபடியா லியற்பெயராகவே கொள்வது உசிதமென்றுகாண்கிறது. "நூற்றுவரைமங்கநூற்ற" வென்ற விடத்தில் "நூற்ற" என்னும்பதம், ராஜ்ஜிய தந்திரத்துக்குள்ள மந்திராலோசனையையும்போர்க்களத்துக்குள்ள சாதுரிய சாமர்த்தியத்தையும் செவ்வையாக உரியவரைக் கலந்துகொண்டு ஸ்ரீ கிருஷ்ண பகவான் முன்னரே பகுத்தறிந்து அவையவைக்குத் தக்க சூழ்ச்சிகளையும் ஏற்பாடுகளையும் தன்யுக்திபுத்தி உலகஹிதத்திற் கேற்பச் சமைத்து உலகத்தைக் காத்துரக்ஷித்தானென்றுபொருள்படக்கூறியபடி Calculated and designed for public good. "தோழிமீர்காள் நிகரில் முகில்வண்ணன் நேமியான் என்னெஞ்சம் கவர்ந்தான், அவனது திவ்விய ஸௌந்தரியத்தில்மட்டுந்தோய்ந்து அவனிடத்தில்நான்ஈடுபட்டதாகத் தோழிகளே, நீங்கள் எண்ணவொண்ணாது. அவனதுகுணாதிசயங்களில் முதன்மையான ஆச்ரித வாத்ஸல்யத்தில்தான் ஈடுபட்டேன். பகவான் சக்கராயுதத்தைக் கையில் எப்போழ்தும்தரித்திருப்பது ஆச்ரிதரைக்காப்பாற்றுவதற்குஉதவுவதின்நிமித்தமும் அவர்களினது இஷ்டஸித்தி மனோரதம் இவைகளை முடித்துத்தலைக்கட்டுவதற்குமன்றோ? உதாரணமாக: பாண்டவர்களின் தூதனாகத் துரியோதனன்சபைக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஏகுகையில் இடையில் வீட்டுமனது விடுதிக்குப் போக நேர்ந்தபோது, பின் ஏற்படப்போகின்ற பாரத யுத்தத்தின் பிரஸக்தி வரவே, வீட்டுமன் "நான்தான் கௌரவருக் குதவியாக அப்போரிலமையப்போகிறேன், நீவிர் யார்பக்ஷத்தில் யுத்தத்தில் அமரப்போகிறீ"ரென்று வினவ, கிருஷ்ணபகவான் "நான்ஆயுதமெடுத்துச் சமரில்அமர்ந்திருக்கப் போவதில்லை-இந்நிபந்தனைக்குள்பட்டுயாரென்னைவரிக்கப்போகிறார்களோ அவர்கள்பக்கம் துணைநிற்பேன்" என்று சொல்ல, வீட்டுமன் தன் உயிரனைய பஞ்சபாண்டவர்களைப் பகவான் கைவிடானென்றாஹித்துத் தெளிந்துகொண்டான். ஆயினும் பகவானின்ஸமபுத்தியைப்பாராட்டினவன்போல் "நீவிர்ஆயுதமெடுக்கும் வரையில் நான் பாண்டவர்ஸைநியத்தைத்தொலைத்து அவர்களையும் பீடிப்பே"னென்றான். இட்ட சபதத்திற்கேற்பப் பீஷ்மன் தான்சேனாதிபத்தியம்வஹித்த தினத்தில் அர்ச்சுனனது தேருக்கு எதிரிலே நின்று பின் நிற்கும் அவன் படைகளையெல்லாம் தொலைத்ததுந் தவிர அவனது தேர்க்குதிரைகளையும் கொல்லவே, ஸ்ரீ கிருஷ்ணபகவானும் அர்ச்சுனனும் தேரை விட்டுக் கீழே குதிக்க, அர்ச்சுனனது கிரீடத்தையும் பாணத்தால் அறுத்துத் தள்ளினார். ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனது நிலைமையைக்கண்டு ஆற்றாதவராய்த் தம் சக்கிராயுதத்தை ஆப்தனுக்கு உதவிபுரிய எடுக்கவே அவ்வாயுதம் வெகு பிரபாவிசேஷத்துடன் அவர் திருக்கையில் விளங்கியதை வீட்டுமன் கண்ணுற்று, தன் தேரினின்று கீழ்குதித்துத் தன் ஆயுதங்களையும் ஒழித்துவிட்டுக் கைகூப்பிப் பகவானை நோக்கி, "நீயேயல்லவோ ஆச்ரிதர்களைத் தாய்தந்தைபோல் இரக்ஷிப்பவன். ஆயுத மெடேனென்று நிறுவிய அவ் வாக்கானது பொய்த்தாலும், ஆச்ரிதருக்குஅளித்த வாக்குப் பொய்க்கலாகாது என்றல்லவோ நீ இப்போழ்து ஆயுதமெடுத்தாய்? உன் வல்லமைக்கு ஆயுதஉதவி வேண்டுமோ? பாரதப்போரை நீ ஒருக்கணத்தில் உன் திவ்விய சக்தியினால் முடிக்கமாட்டுவாய் அல்லையோ!" என்று பலவிதமாய்த் தோத்திரஞ் செய்தது நீங்கள் அறியீர்களோ; கேட்டிருப்பீர்களல்லவா?

---

# சூரியன்

## II. பகலவன் உருவம்
### (வடிவமும் அமைப்பும்)

[107-வது பக்கத் தொடர்ச்சி]

வெண் பரப்புகள் (Whit patches):—சூரியனது நாடிமண்டலத்தை, ஒரு மைதெறித்த வெள்ளாடையோடு ஒப்புமைகூறி, மைதெறித்த இடங்களே, சூரியப் புள்ளிகளாம் எனக்கண்டோம். மைதெறிக்காத வெள்ளாடைப் பகுதியும் உண்டன்றோ? புள்ளிகள் ஆகிய கருந்திட்டுகளின் பக்கத்தே மிக்க வெண்மை ஒளி வீசுகின்ற வெள்ளைப்பரப்புகள் காணப்படுகின்றன. இவற்றைப்பற்றியும் பலரும் பலவாறு கூறிவருகின்றனர். ஆயினும், இவை சூரியனது தத்துவத்திற்கு ஜீவாதாரம் எனத் தெரியவருகின்றது.

எடையும், அளவும்:—சூரியன் ஒரு நெருப்புப் பந்து என்றும், பல்லாயிரம் சுடர்க்கொழுந்துகளை நாக்குக்கள் போலத் தொங்கவிட்டுக்கொண்டு ஒளிரும் உருவம் என்றும்கூறினோம். இதனுடையஅகல நீளம், எடை—இவற்றை இப்போது ஆராய்ச்சியாளர்கள் திட்டமாய்க் கணக்கெடுத்துள்ளார்கள். சூரிய மண்டலத்தின் குறுக்களவு, எட்டுலக்ஷத்து அறுபதினாயிரம் கல் (860,000). அதன் எடை 19-ன் பின் 26 சுன்னங்கள் வைத்த எண் எத்தனையோ அத்தனை டன் னாகும். ஒரு டன்னிற்கு, 90 மணங்கு என்றால், மணங்குக்கணக்கில் இன்னும் இரண்டு சுன்னங்களைச் சேர்க்கவேண்டுவதுதான். கோடி கோடி மஹா கோடி என்றும், கோடிமஹா கோடி சங்கம் என்றும், கோடி சங்கம் மஹா சங்கம் என்றும் வழங்குகிற பழைய கணக்கதிகாரத்தின்படி அது, 19 மஹாசங்க மணங்குகளாகும். சூரியன் எடையோடு பூமியின் எடையை ஒப்பிட்டுப்பார்த்தால், சூரியன் பூமியைவிட முந்நூற்று முப்பதினாயிரம் (330,000) பங்கு எடை மிக்கு விளங்குகின்றான். குழிக்கணக்கின்படியோ, சூரியப்பிழம்பு, பூமிப்பிழம்பைவிடப் பன்னிரண்டு இலக்ஷத்து எண்பதினாயிரம் பங்கு, பெரியது. குழிக்குக் குழி ஒப்பிட்டுப்பார்த்தால், சூரியனைவிடப் பூமி இறுகியிருக்கக்காண்கிறோம். ஒருகன அங்குலத்திலே கண்டாலும் (Cubic inch) பூமியின் இறுக்கம், சூரியனது இறுக்கத்திலும் நான்கு பங்கு மிக்கு இருக்கின்றது. தண்ணீரின் இறுக்கத்தைத் தனியனாகக் (unit) கொண்டு அதனை, ஒன்றென்று கூறி, மற்றப்பொருள்களை அதனோடு ஒப்புமைகொள்கின்றனர். அந்த வகையில் சூரியன் தண்ணீரைவிட 1·39 மடங்கு இறுகியும், பூமி 5·527 மடங்கு இறுகியும் விளங்குகின்றன. பூமியினுடைய பிழம்பு சூரியனைவிட மிக இறுக்கமானது. இறுக்கமான இரும்புக்கும், நெகிழ்ந்தோடும் நீருக்கும், உள்ள வேற்றுமையைப் போலாகும், இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமையும். சூரியன் மிக வெப்பமுள்ள பொருளாதலின் அதனிடையே கல்லும் கரியும் உருகி நீராகிக் கிடக்குமேயன்றி இறுகிக்கிடப்பதில்லை. நமது உலகமோ பெரும்பான்மையும் குளிர்ந்துவிட்டமையால் பொருள்கள் நெகிழ்ச்சியின்றி இறுகிக்கிடக்கின்றன.

சூரியப் புரைகள்:– நமது பூமி யென்னும் உருண்டைப்பந்தின் நடுக்குலையாம் கருப்பத்தில், நெருப்பே திகழ்கிறது; இதனை நெருப்புப்புரை என்று கூறுவர்; இதன் மேலே நீரானது பரந்து ஓடுகின்றது; இதனை நீர்ப்புரை என்பர்; இதற்குமேல் மண்ணே செறிந்து கிடக்கின்றது; இதனை மண்ணுப்புரை என்கின்றார். இன்னவாறு நம்முடைய பூமி மூன்று புரைகளோடு விளங்குகிறதெனப் பூகோள சாஸ்திரிகள் கூறுகின்றனர். இவ்வண்ணமே சூரியப்பந்தும், மூன்று புரைகளோடு திகழ்கின்றமை காண்கின்றோம். மேற்பாகம் செவ்வானம்போலச் சிவந்த நிறத்தோடும் திகழ்கின்றது. இதனை நிறப்புரை (Chromosphere) என வழங்குகின்றனர். இதிலுள்ள பொருள்களனைத்தும் காற்றைப்போல வாயுவாகி நிற்பன. இப் பொருள்கள் நிறமற்ற சுடர்வடிவாகஇயங்குவதால் இப்புரையினூடே, உள்ளிருக்கும் புரையையும் நாம் காணலாம். இவ் விரண்டாம் புரை, பிரகாசமுள்ள மஞ்சள் நிறத்தோடு தோன்றி, இயக்கம் என்பதேயின்றி விளங்குகின்ற கனத்ததோர் போர்வையாகும். இதனில், சுண்ணாம்பின் சத்து (Calcium vapours) ஆவியாக ஒளிர்ந்துகொண்டிருக்கக் காண்கின்றோம். இதனை ஒளிப்புரை (Light sphere) எனவழங்கிவருகின்றனர். இப்புரையினூடே ஆழ்ந்துநோக்கினால் இதற்குப் பின்னால் சூரிய மண்டலத்தின் கருப்பம், வாயுவாற் கட்டப்பெற்ற நெருப்புச்செறிவாகத் தோன்றுகின்றது. இதனைக் கருப்பப்புரை என வழங்கிவருகின்றனர். பூமியைவிட எத்தனையோமடங்கு சூடு மிகுந்து இருக்கும் வகையில் சூரியன் இதிலிருந்து வேறுபட்டாலும், உறுப்புக்களின் அமைப்பினாலே, பூமியோடு இவ்வாறு ஒத்திருக்கக் காண்கின்றோம். நமது உலகின் கண்ணே, எரிமலைகள் எரிந்தெழுவது போல, சூரியமண்டலத்திலும் நிகழ்கின்றன. அவை கடுமையாக நிகழும்போது பலகோடி சூரிய அணுக்கள், அங்கிருந்தும் நமது உலகத்தின்மீதும் ஏனைய கிரகங்களின்மீதும் வீசி யெறியப்படுகின்றன. அக் காலங்களில் நமது உலகிலே எதிர்பாராதபடிஅகால மழை, வெப்ப அலை, ஊத வாடை, பஞ்சம் முதலிய கோர சம்பவங்கள் நிகழ்கின்றன. அவற்றினால் ஜீவராசிகள் கணக்கின்றி மடிகின்றன. இவை எப்பொழுது நிகழும், எனக் கண்டறிந்து சொல்லவல்லார் ஒருவரும் இல்லை.

சூரிய கிரீடம் (The Corona):— சூரியப்பிழம்பின் மூன்று புரைகளும், மூன்று மண்டலங்களும், சுடர்க் கொழுந்துகளும், சூரியனுடைய உறுப்புக்களாக அமைந்துகிடப்பதைத் தூரதிருஷ்டிகண்ணாடியின் வழியே கண்டோம்.

> செஞ்ஞா யிற்று நிலவு வேண்டினும்
> வெண்டிங் களுள் வெயில்வேண்டினும்
> வேண்டியது விளைக்கும் ஆற்றலை —புறநானூறு

எனச் சங்கப்புலவர்ளில் ஒருவர் பாடியிருக்கின்றார். செஞ்ஞாயிற்றினுள்ளே திங்களினும் குளிர்ந்த வெண்ணில விருப்பதனை அந்த நாளில் அறிந்திலர்போலும். செஞ்ஞாயிற்றின் தீயொளியினிடையே எழுந்து திங்களினும் குளிர்ந்து தண்ணொளிபரப்பியும், பாலென வெண்ணிலவு பொழிந்தும், மூடுபனிபோல எங்கும் தண்ணெனச் செறிந்தும், 'வெள்ளியா லியற்றலின் ஒளிர்கின்றனவோ, தந்தத்தால் சமைத்தலின் வழுவழுக்கின்றனவோ, வெண்பட்டால்புனைதலின் மெத்தெனத் திகழ்கின்றனவோ' எனக் கண்டோர் மருளச் சூரியனைச் சுற்றிலும் வெள்ளொளி வடிவாம் சிறகுகள் முளைத்தடர்ந்து முகிழ்ப்பதுபோல முழுதும் ஒளிர்ந்தும், வியப்பினும் வியப்பாய் விளங்குகின்ற ஒளிவட்டம் இச் சூரியமண்டலம் முழுதும் நிறைந்து மிளிர்கிறது. பல்லாயிரம் கோடிக் கல்லுக்கப்பாலும் சென்று நின்ற அனைத்தையும் தன்னொளிகொண்டு தழுவி எங்கும் பரவுகின்றது. இதனைச் சூரியகிரீடம் என்பர். கிரீடம்போல, இஃது, ஒருதன்மையதன்று. ஓரிடத்தே பெருத்தும், மற்றோரிடத்தே சிறுத்தும், ஒருபுறத்தே ஒளி மிக்கும், மற்றொரு புறத்தே ஒளி மழுங்கியும் தோன்றுகின்றது. இதன் தன்மை யாதென்று ஆராய்வதற்கு இன்னும் போதுமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இவ்வொளி சாதாரணமாகக் கண்ணால் காணக்கூடியதுமல்ல; தூரதிருஷ்டிக் கண்ணாடிக்கு அகப்படுவதும் அல்ல. முழுச் சூரியகிரகணம் (Total Solar eclipse) பிடிக்கும் காலத்திலே, கதிரவனொளி முற்றும் மறைந்தபோது, இந்தப் பால்போன்றவொளி, குளிர்ந்தெழுந்து ஆகாயம் முற்றும் விரிந்து பரவுகின்றது. பூரணச் சூரியகிரகணமோ, முப்பதாண்டுக்கொருமுறை

நாம் காணும் காட்சி. முப்பதாண்டுக் கொருமுறை கண்டபோதும் மூன்று நான்கு நிமிஷங்களுக்கு மேலே அக்காட்சி நிகழ்வதில்லை. இக்குறுகிய கால அளவையில் எதைக்கண்டு எதை ஆராய்வது! இதனால், மாந்தர்கள் அவ்வக் காலங்களில் காண்கின்ற காட்சிக்குப் பொருத்தமாக, இச்சூரிய கிரீடத்தின் தன்மையை விளக்கிவருகிறார். மிகச் சிறிய தூசுபோன்ற பொருள்களினிடையே மின்சாரம் பாய்வதாலேயே இவ்வெள்ளொளி எழுகின்றதெனச் சிலர் கருதுகின்றனர். சூரியப் பிழம்பிலே, பேராற்றல் மிக்க காந்தப் பிரதேசங்களில் நிகழும் பலவகையான விசித்திரமின்சாரத் தோற்றங்களின் பயனாகச் சூரிய கிரீடத்தின் வெள்ளொளியும் மாறிமாறி ஒளிர்கின்றதாம்.

இராசிச்சக்கரத்தெழிலொளி (Zodiacal Light).மற்றொருவியத்தகு காட்சியுண்டு. இதுவும் சூரியகிரீடத்தோடு தொடர்பு பெற்றதெனப் பலர் கருதுகின்றனர். ஈதே, சூரிய வீதியாம் இராசிச் சக்கரத்தின் எழிலொளி எனப்பெயர் பெறுகிறது. பூமியில் வடக்கு எல்லையில், இவ்வழகிய காட்சி அடிக்கடி தோன்றுகிறது; நாடி மண்டலத் தருகிலும் கண்ணைக்கவரும் விசித்திரத் தோற்றமாக விளங்குகின்றது. இதனைக் கண்டு அந்திகாலத்தொளி என எண்ணிப் பலர் மயங்குவதுண்டு. இஃது, சூரியாஸ்தமனத்தின் பின்னே செவ்விதின் விளங்கித்தோன்றும். சூரியகிரீடத்தின் எல்லையையும் தாண்டி நெடுந்தூரம் இவ்வொளி பாவிநின்று மிளிர்கிறது. ஒளிப்பொருளை வாரி இறைத்தாற்போல நெடுகநீண்டு நின்று ஒளிர்கின்ற இந்தக் காட்சி அற்புதக் காட்சியேயாம்.

உதயந்தனில் அயனுய்வுரும் உயிர்காவலில் அரியாய்
வதைவந்திடின் அரனுய்வுரு மாறும்பிற வெங்ஙன்
இதையங்களின் இவனே இறை எவைஎங்கணும் இவனே
கதையென்றறி காணுவிறை காணும்மிறை கதிரோன்.

(வினாவிளக்கம் - பெருந்திரட்டு)

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—9. கார்காலப் படலம்

[101-வது பக்கத் தொடர்ச்சி]

சிறுநகை குலவத் திரிபுர மெரித்தான்.

எல்லாங் கடந்த கடவுள், தன் துன்பத்தைச் சொல்லால் முழக்கிலோ சுகமில்லை என்பதை நினையாமல், இன்னணம் புலம்புவானேல் அன்னவனுக்கு என்ன ஆறுதல் அளிக்கவல்லவனாவான் ஒரு தம்பி. இவன் இயம்பக்கூடியனவெல்லாம் முன்னரேயொருமுறை இயம்பி ஆகிவிட்டது. அவைகளோ இராமனதுநெஞ்சிற் றங்காமல் அப்புறங் கழன்றுபோயின. எனினும், "தேற்றுவாய் நீயுளை" என்று தன்னை மீண்டும் அவ்வண்ணன் பரிந்திரக்கக் கண்டனன் இலக்குவன். கண்டு,

இளவலு முரைசெய்வா னெண்ணு நாளினும்
உளவல கூதிரு மிறுதி யுற்றதாற்
களவுசெய் தவனுறை காணுங் காலம்வந்
தளவிய தயர்வதெ னைய யாழியாய்

[தம்பியாகிய இலக்குவனும் பின்வருமாறுஉரைப்பான்: "ஆக்ஞாசக்ரத்தையுடையவனே, நாம் எண்ணியெண்ணிக் கழிக்கவேண்டிய நாட்கள் இனி இல்லை. கூதிர்க்காலமு முடிவடைகின்றது. ஆதலின், சீதையைக் கவர்ந்துசென்றவன் வசிக்கின்ற இடத்தைத் தேடிக் கண்டுபிடிக்குங்காலம் நெருங்கிவிட்டது. நீ யேன் அயர்கின்றாய்]

என்று, காலங்கடந்த கடவுளுக்குக் காலம் கடக்கின்ற தன்மையை முதலில் எடுத்துக் காட்டினான். இனி, அக்கடவுளின் செய்கைத்திறத்தைச் செப்பவேண்டியது அவசியமாயிற்று. அக்கடவுள், தன் ஆற்றலிற் கியைந்தவாறு ஒன்றினை இயற்றுவதன்றியும், பிறர் எதிர்பார்க்கின்றவகையிலேயும் இயற்றும் குணமுடையோன் என்பதைக் குறித்துரைப்பவனாகி,

திரைசெயத் திண்கட லமிழ்தஞ் செங்கணான்
உரைசெயத் தரினுமத் தொழிலு வந்திலன்
வரைமுதற் கலப்பைகண் மாடு நாட்டித்தன்
குரைமலர்த் தடக்கையாற் கடைந்துகொண்டனன்

[அலைகள் எறிகின்ற அவ் வலிய பாற்கடலானது தன்பால் உள்ள அமிர்தத்தைக்'கொடு' என்று செங்கண்மால் ஒரு கட்டளையிட்டஅளவிலே கொடுக்கக்கடவதானாலும், அத்திருமாலோ அவ்வாறு தன் ஆணையைச் செலுத்தற்கு விரும்பாமல், மந்தரமலை முதலிய உபகரணங்களைக் கொணர்ந்து நாட்டி, ஆபரணங்கள் ஒலிக்கின்ற தன் செந்தாமரைக் கைகளால் கடைந்தே கொண்டனன்]

என்னலாகின்றான். சீதையைச் சிறைமீட்ப தென்னும் நிபத்தால் இராவணனாதியரை அழித்து, அமரரோடு அந்தணர்தம் துயரினை இராமன் களையவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதால், எதிர்பார்த்தபடியே இவன், முன்னாளில் அமிழ்தத்தை எய்துவித்ததுபோல் இப்பொழுதும், காலமும் இடமும்ஏற்ற கருவியுங் கொண்டு இதனை ஆற்றும்வரை காத்தேயிருப்பதல்லால் வேறு நெறியில்லை என்பதை நினைவுசெய்துதந்து, மீண்டும் அக்கருத்தையே,

மனத்தினி னுலகெலாம் வகுத்து வாய்ப்பெயும்
நினைப்பின னாயினு நேமி யானெடும்
எனைப்பல படைக்கல மேந்தி யாரையும்
வினைப்பெருஞ் சூழ்ச்சியிற்பொருது வெல்லுமால்

[சக்ராயுதத்தையுடைய திருமால், மனத்தில் நினைத்த அளவிலேயே உலகமனைத்தையும் கூறாக்கி வாயில்போட்டுக்கொள்ளக்கூடிய சங்கற்பசக்தி யுடையவன் ஆயினும், அவ்வாறுசெய்யாமல், மிகப்பலபடைக்கலன்களைக் கையிற்கொண்டு, இவ்வுலகத்தைக் காக்கும்பொருட்டுத் தான் அழிக்கநினைக்கின்றஅனைவரையும், போரிற்குரிய பெரிய தந்திரங்களுடன் போர்செய்தே வெல்கின்றான்.]

என்னுமாற்றால் வற்புறுத்துகின்றான். முன், பாற்கடல் கடைந்தது வாலியே என அங்கதன் உரைத்ததைக் கேட்டிருந்த இலக்குவன் திருமாலுக்கு அச்செய்கையைச் சேர்த்தது இவன் அறிந்த கல்பத்தின் பேதத்திற்கு இயன்றபடி இயம்பியது ஆகும்போலும். வினைப் பெருஞ் செய்கையைத் திருநெடுமால் வீணே மேற்கொள்வதைக் கூறியவன் இங்கு வினைப் பெருஞ் சூழ்ச்சியை மேற்கொள்வதன் பொருளின்மையை உணர்த்துகின்றான். இவை, சீதையின் பிரிவை இராகவன் பொறுத்திருப்பதற்குரிய காரணங்களாவதனினும், மேலினி அவன் ஆற்றவேண்டிய



வகையினை அறிவுறுத்துவன போன்றே நிற்கின்றன. படைப்பும் அழிப்பும் சிந்திப்பதேயுமின்றி நடைபெறலாக்குகின்ற கடவுள், சிறு காரியங்கள் செய்ய இத்துணை உபகரணங்களும் சூழ்ச்சியும் தேடுவானேனென்னின், அதற்குவிடை யார்அறிவார்? அக்கடவுளேதேன் அறியுமோ, அதுவுந் திண்ணமன்று. இவ்விந்தையை உட்கொண்ட இலக்குவன்,

கண்ணிடை நுதலினன் கணிச்சி வானவன்
விண்ணிடைப் புரஞ்சுட வெகுண்ட மேலைநாள்
எண்ணிய சூழ்ச்சியு மீட்டிக் கொண்டவும்
அண்ணலே யொருவரா லறியற் பாலதோ

[பெருமையுடையோனே, நெருப்புக் கண்ணினையுடைய நெற்றியையுடையவனும் மழுவாயுதத்தை ஏந்தியவனும் ஆகிய சிவபிரான், ஆகாயத்தில் திரிகின்ற திரிபுரங்களைக் கொளுத்தவேண்டுமென்றுகோபங்கொண்டபோது, அன்னவன் எண்ணிய சூழ்ச்சிகளையும் சேகரித்துக்கொண்டவைகளையும் யாரால் அறியக்கூடும்.]

என நவில லாகின்றான். முப்புரங்களை யழிக்கச் சிவபிரான் ஈட்டிக்கொண்ட சிறப்புடை யுபகரணங்கள் எண்ணில. இப்பூமியையே தேராகக் கொண்டான்; நான்கு வேதங்களையும் நான்கு குதிரைகளாகப் பூட்டினான்; நான்முகனைத் தேர்ப்பாகனாக்கினான்; இரு சுடர்களையும் இரண்டு சக்கரப்படைகளாகக் கொண்டான்; மேருவை வில்லாக வளைத்து அதற்கு வாசுகியை நாணியாகப் பூட்டினான்; வாயுபகவானைச் சிறகாகவும் அக்கினி பகவானை நுனியாகவும் உடைய அம்பாகத் திருமாலையே ஏந்தினான். இன்னவிதம் ஆயத்தமாகி, முப்பத்து முக்கோடி தேவகணங்களும் கணக்கிறந்த பூதகணங்களும் புடைசூழ, முப்புரத் தசுரரைப் போர்செய்தொழிக்கக் களத்தினுள் வந்துதோன்றிய அக் கண்ணுதற்கடவுள் இறுதியிற் செய்ததுயாதெனச் செப்பவேண்டுமோ! இப்போரிற்குத்தான் கைக்கொண்டிருக்கின்ற கருவிகளின் அளவும் ஆற்றலும் அவனுக்குநன்குதெரிகின்றன. இவைகளின்றிச் சிவபிரானால் வெல்லற்கு இயலாதென்று எண்ணிய தேவர்கள் ஈட்டித்தந்தனவாம்இவை. நெஞ்சிற் கறையுடைய தேவனும், அத்தேவர் எதிர்பார்த்ததற்கு மாறாகத் தான் முயலவேண்டா என்று எண்ணியவோர் சூழ்ச்சியால் அவைகளை ஏற்றுக்கொண்டனன். ஆயினும் பாணந் தொடுக்குமுன் அப்பிறைசூடி, "கருதிய கருமத்தை என் சிந்தையின்படி இயற்றாமல், அவர் காட்டியவழியே நடத்துவதற்கு ஏன் இசைந்தேன். பித்தன் என என்னைச் சிலர் பரவுவது தக்கதேயாயிற்று" என்று சில நினைக்குமளவில் அவன் வாயினுள் ஒரு சிறுநகை திரண்டதுபோலும். அங்ஙனே திரிபுரங்களும் நீறாய் உதிர்ந்தன. கண்ணுடை நுதலினன் எண்ணிய சூழ்ச்சியும் ஈட்டிக்கொண்டனவும் இவையிவையென மனத்தில் வைத்தே இலக்குவன், அம்மறையினை, "அண்ணலே ஒருவரால் அறியற்பாலவோ" என்று இங்கிதமுற இயம்புகின்றானென்று ஐயுறவெய்துதலுந்தகும். எனின், இதற்கிணங்கியே பின்வரும் மொழியுந் தொடர்கின்றது :—

ஆகுநர் யாரையுந் துணைவ ராக்கிப்பின்
ஏகுறு நாளிடை யெய்தி யெண்ணுவ
சேகுறப் பன்முறை தெருட்டிச் செய்தபின்
வாகையென் றொருபொருள் வழுவற் பாலதோ

[நமக்குத் துணைவர்கள் ஆகக்கூடியவர்களை யெல்லாம் ஆக்கிக்கொண்டு, போவதற்குரிய நாளில் போய், ஆலோசிக்க வேண்டியவைகளை உறுதியாகப் பலமுறை ஆலோசித்துத் தெளிந்து, பிறகு நாம் செய்யவேண்டியவைகளைச் செய்தால், வெற்றியென்பது நமக்கு வாய்க்காமல் தவறிவிடக் கூடுமோ.]

இத்துணை உபகரணங்கள் இருப்பதால் வெற்றி வாய்ப்பது திண்ணமென்று உறுதி கூறுவதனினும், அவை இருந்தாலும் வெற்றி வழுவாமல் பெறலாம் என்று தேறுதல் செப்புவதே இத்தகைய செவ்வியியற்கையுடையதாம். கடவுள்போன்ற அளவில்லா ஆற்றலுடையோர்க்குக் கருவிகள் அனைத்தும் சால இடையூறு செய்வனவேயன்றி வேறல்ல. அவ்விடையூறைக் கடந்து வெல்வதே உண்மையான வாகையாம். ஒன்றும் ஆற்றமாட்டாதவன் கருவிகளோடு இகலிக் கலங்குவான்; மற்று, வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாகலாம்; மற்று, அதனினும் வல்லவனோ, தன்மேல் சுமத்தப்படுகின்ற ஆயுதங்களையும் பொறுத்து வெற்றி காண்பவனாவான்; ஆதலின், "அண்ணலே, காலம் இடம் கருவி துணைவர் முதலிய இடையூறுகளால் நீ கட்டுண்டிருக்கின்றாயாயினும், உன்னுடைய எண்ணில்பேராற்றலை மனத்திற் கொண்டு, வெற்றியோ வழுவிவிடும் என்ன அஞ்சேல், இன்னதற்குத் திரிபுர மெரித்த சிவபிரானே சாலுங் கரி" என்னுஞ் சிந்தையனாய் இலக்குவன் இவையிவை இயம்பினனோவென ஐயுறவெய்துதல் பேதைமைத்தன்று. மற்றினி எத்துணை வலிமைதான் இருப்பினும் இத்துணை இத்துணை தனக்கு இடையூறுகளுடைய கருவியையும் காலத்தையும் துணைவர்களையுங் கடந்து எங்ஙனம் அவ்வரக்கரை வெல்லஇயலுமென்னும் சங்கை இன்னுஞ் சிறிதிருக்குமாயின் அதுவுந் தீர,

அறத்துறை திறம்பின ரரக்க ராற்றலர்
மறத்துறை நமக்கென வலிக்கும் வன்மையோர்
திறத்துறை நன்னெறி திறம்ப லுண்டெனிற்
புறத்தினி யார்திறம் புகழும் வாகையும்

[அவ்வரக்கர் ஆற்றலுடையவர்களேனும், அறநெறியை விட்டுவிலகினவரும், பாவவழியே தமக்கு உரியது என்று நிச்சயித்தவர்களுமாக இருக்கின்றனர். இப்படி அவர்கள் நன்னெறிவிட்டு விலகிவிட்டார்களென்றால் பிறகு வெற்றியும் புகழும் நம்மையே சேர்வதல்லாமல் அவர்களைச் சேரவுங் கூடுமோ.]

எனப் பகர்ந்து, "நம்முடைய இடையூறு எவ்வளவேயாயினும், அவர்களுடைய பாவமேஅவர்களைத் தோற்பிக்கும்" என்பதை எடுத்துக் காட்டி வற்புறுத்துகின்றான். அதுவுமன்றி,

பைந்தொடிக் கிடர்களை பருவம் டையவே
வந்தடுத் துளதினி வருத்த நீங்குவாய்
அந்தணர்க் காகுநா மரக்கர்க் காகுமோ
சுந்தரத் தனுவலாய் சொல்லு நீயென்றான்.

[பசுமையான வளையல்களையணிந்த சீதைக்குத் துன்பம் தீருங்காலம் மெல்லமெல்ல வந்துசேர்ந்துவிட்டது. இனி, நீ துயரம் ஒழிவாய்; முனிவர்களுடைய ஆசியைப் பெற்றிருக்கின்ற நாம், அரக்கர்களுடைய ஆற்றலுக்கு இலக்காவோமோ, அழகிய வில்லில் வல்ல வீரனே, நீயே சொல், என்றான்.]

ஆதலின், அரக்கர் பாவமும், சீதையின் நற்காலமும், அந்தணர் ஆசியும் இருக்க, வேறினி அஞ்சுவதேனென இலக்குவன் அறைதலும்,

உறுதியஃ தேயென வுணர்ந்த வூழியான்
இறுதியுண் டேகொலிம் மாரிக் கென்பதோர்

தெறுதுய ருழந்தனன் றேயத் தேய்வுசென்
றறுதியை யடைந்ததப் பருவ மாண்டுபோய்

[அதுவே உறுதியென்று உள்ளத்திற் கொண்ட இராமபிரான், இம்மழைக்காலத்திற்கும் ஒரு முடிவு இருக்கின்றதோ வென்றவோர் கொடுந்துயர் பட்டு மெலிவடைய அக்கார்காலமானது தன் ஆட்சியைச் செலுத்திவிட்டுத் தேய்ந்து தேய்ந்து முடிவடைந்தது.]

இங்ஙனம் உறுதிகள் கூறவேண்டியிருந்தவனும், மாரிக்கு இறுதியும் உண்டோ என்று ஏங்கவேண்டியிருந்தவனும், ஊழிக்கெல்லாந் தலைவனை இராமபிரானே என்பதை நமக்கு நினைவு நனி செய்தளித்து, நாடகம் இதுவென நாம் மறக்காவண்ணம் கம்பர் காக்கின்றார்.

---

# பாரதியார் வேதாந்தப் பாடல்.

[111-வது பக்கத் தொடர்ச்சி]

"பரிதிகாட்டி அக்கணமே கிணற்றுளதன்
விம்பங் காட்டி அறிதி கொலோ"

என்ற அவ்வடிகளின்சாரம்பின்வருமாறு:—உலகத்தில் சூரியன் ஒருவனே என்பது யாவரும் அறிந்த உண்மை. அந்த ஓரே சூரியனுடையபிரதிபிம்பத்தைக் கிணற்றிலும் ஆற்றிலும் குளம் குட்டைகளிலும்கடலிலும் ஓரே சமயத்தில் காணலாம். சென்னையில் நீதி மன்றத்திற்குநேராக விண்ணில் ஒருவனுக்குத்தென்படும் சூரியன் அதே தருணத்தில் காசியில் மற்றொருவனுக்கு ஆலயத்தின் கோபுரத்திற்கு நேராக உச்சியில் தோன்றுகிறான். கிணற்றுநீர் சலனமற்று இருப்பதால் அங்கு அசைவில்லாமல் தெளிவாகக் காணப்படும் சூரியன் குளம் குட்டைகளில் நீரின் அசைவினாலவ்வளவு தெளிவாகக் காணப்படுகின்றதில்லை. அதனுள்ளே ஒரு கல்லை எறிந்தால்அசைவின் மிகுதியால் சூரியனின் பிம்பம் மறைய ஆரம்பிக்கிறது. சென்னையில் ஒளிகுன்றாமல் பிரகாசிக்கும் சூரியன் காசியில் பார்க்கும்பொழுது மேகத்தில் மறைந்து ஒளிகுன்றியிருக்கலாம். இத்தனைவிதமான சூரியன்கள் தோன்றுவதற்கெல்லாம் காரணம் ஓரே சூரியன்தான். அவனொருவனே உண்மையில் உளன். ஏனைய வெல்லாம் அவனுடைய போலி யுருவங்கள். இம்முறையே நம்முருவத்தினுடைய பிரதிபிம்பங்களை யொரேசமயத்தில் பல கண்ணாடிகளில்காணமுடியும். அக்கண்ணாடிகளை நேராகவும்சாய்வாகவும் வைப்பதற்குத் தகுந்தபடியே நம்முருவம் ஒவ்வொன்றிலும் மாறிமாறித் தோன்றும். உள்ளதாகிய நம்மின் ஓரே உருவம் பல வேறு உருவங்களாகப் பிரதிபிம்பித்துத் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது, சூரியனின் உருவத்தைப் பிரதிபிம்பித்துக் காட்டிய நீர்போல, அந்தக்கண்ணாடியே யாகும்.

உலகத்தில் சிருஷ்டியும் இப்படியேதான் உண்டாகிறது. ஆதியந்தமற்று உருவத்தில் எல்லையற்ற நிர்க்குணமான முதற்பொருள் உலகத்தில் ஒன்றேதான் உண்டு. அதுதான் பிரும்மம் அல்லது பரம்பொருள் என்று சொல்லப்படுகிறது. அது, என்றும் அழியாத எல்லையற்ற பொருள். அப்பொருளை நீரினால் நனைக்க முடியாது, தீயானால் தெறமுடியாது, கத்திகொண்டு சேதிக்கமுடியாது, காற்றினால் வாட்டமுடியாது. விகாரப் படாமல் என்றும் ஓரே தன்மையாயிருக்கும் பிரும்மமே மரம் செடி கொடி, மிருகம், பறவை, மீன், பாம்பு, மனிதன், முதலிய ஜீவராசிகளாகவும் மண், விண், கால், எரி, நீர்முதலியவற்றாலாகிய உலகமாகவும் தோற்றுகிறது. இதையே சிருஷ்டியென்கின்றோம். இப்படித் தோற்றுவதற்கு அல்லது சிருஷ்டிக்கு, காரணம் அவித்தை மாயை அல்லது அஞ்ஞானமேயாகும். உண்மைப்பொருள் கண்ணாடியில்தோன்றுவதுபோல, மாயையினாலே பிரம்மமும் இப்படித் தோற்றுகின்றது. நான், நீ, அவன் அல்லது அவள் என்று பல்வேறு ஜீவன்கள் இருப்பதாகவும், ஒரு ஜீவன் துன்பத்திலிருக்கும்பொழுது மற்றொருஜீவன் (ஆன்மா) இன்பமா யிருப்பதாகவும் நாம் கொள்வதெல்லாம் வீண். இவை, ஆறு கிணறு குளம் குட்டைகளில் பல்வேறாகத் தோன்றும் சூரியபிரதிபிம்பங்களைப் போன்று, உண்மைப்பிரும்மத்தின் போலித் தோற்றங்களேயாகும். இவ்வாறு தோன்றற்குக் காரணம் மாயை அல்லது அஞ்ஞானமென்று உணர்ந்து எவனொருவன் பிரும்மத்தின் உண்மையான நிலையையறிந்து, என்றும் அழியாத அந்தப்பிரும்மம் தானே யென்ற ஞானத்தைப் பெறுகிறானோ அவனே இவ்வுலகத்தில் விடுதலையடைந்தவன் (முக்தியடைந்தவன்) ஆவான் என்ற பொருளையே பாரதியாருக்கு, அவர் குரு உணர்த்துவதற்காகச் சூரியனை விண்ணிலே காட்டி அவன்பிரதிபிம்பத்தைக் கிணற்றிலேகாட்டி "அறிந்தாயோ?" என்றார். குரு நுட்பமாகக்குறித்த கருத்தைப் பாரதியார் உணர்ந்து தமிழுலகத்தார்க்குச் செய்த உபதேசமாவது:—

"தேசுடைய பரிதியுருக் கிணற்றினுள்ளே
தெரிவதுபோ லுனக்குள்ளே சிவனைக்காண்பாய்"

இவ்வடிகள் வேதாந்தப் பாடல்களுக் குயிர்போன்றதாகும். ஏனைய பிறபாடல்களெல்லாம் அவ்வுயிருக்கிருப்பிடமாகிய பல உறுப்புக்கள் சேர்ந்த உடம்பு போன்றதாகும். உயிரின் உணர்வுத்தன்மை உடலிலெங்கும் பரவி நிற்றல் போல, இவ்வடிகளின் உட்பொருளே வேதாந்தப்பாடல் முழுவதிலும் விளக்கப்படுகிறது. இதுவே அத்வைதமதத்தின் தத்துவமுமாகும். பாரதியார் இவ்வுண்மையை உணர்ந்த அளவிலே நில்லாமல் வாழ்க்கை யநுபவத்திலும் கண்டு தெளிந்தவராவர். வேதத்திலும், உபநிடதங்களிலும், வியாசபகவான் இயற்றியுள்ள வேதாந்த சூத்திரங்களிலும் இதுவே சாரமான பொருளாய் அமைந்துகிடப்பினும், இதையே சங்கரர் தன் பாஷ்யத்தில் விளக்கியிருப்பினும், அன்னவைகள் நம்மனோரால் எளிதில் கண்டு உணரமுடியாத நிலையிலிருக்கின்றன.

இவ்வுண்மையுணர்வே பாரதியாரின் அச்சத்தை அகற்றியது, அன்னாருக்கு அஞ்சாநெஞ்சமும் வீரமும் ஆற்றலும் அளித்தது. உண்மைத் தத்துவத்தை அறியவொட்டாமல் தடுக்கும் மாயையை மாயையாகவே யுணர்ந்தார். மாயைப்படையைச் சித்தத்தெளிவெனும் தீயால் வென்றார். இது பாரதியாரின் வாழ்க்கையின் நிகழ்ச்சியென்பது கீழ்க்கண்ட அடிகளால் விளங்கும்.

எத்தனைகோடி படைகொண்டு வந்தாலும்
மாயையே—நீ



சித்தத் தெளிவெனுந் தீயின்முன்
னிற்பாயோ—மாயையே"

சித்தத் தெளிவென்னும் தீயில் பஞ்சுபோல் பட்ட மாயை நீங்கிய பின்னர்ப் பாரதியாருக்கு இவ்வுலகத்திலே அச்சத்தை யுண்டாக்கவல்லன யாதும் இல்லையாயிற்று. எதற்கும் அழியாத பிரமம் தானேயென்ற வுணர்வு தோன்றியபின் ஏன் அஞ்சவேண்டும்? இதனால்,

இச்சகத்துளோரெலா மெதிர்த்துநின்ற போதினும்
நச்சைவாயிலேகொணர்ந்து நண்பரூட்டுபோதினும்
பச்சையூனியைந்தவேற்படைகள் வந்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

என்றார்.

அத்வைத ஞானத்தினால் அச்சம் நீங்கிவிட்டால் அதுவே முக்திநிலையாகும் என்பது இவர் தம் அநுபவத்தில் கண்டதொன்றாகும். 'முக்தி நிலையை யடைவதற்குக் கைலாயத்திற்கோ வைகுந்தத்திற்கோ சேரவேண்டும், இவ்வுலகில் இருக்குந்துணையும் ஒருவன் அந்நிலையை எய்த முடியாது' என்போர் வேதாந்தக் கூற்றை,

"செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே யெண்ணியிருப்பார்
பித்தமனித ரவர்சொலுஞ் சாத்திரம்
பேயுரையா மென்றிங் கூதேடாசங்கம்"

என்ற அடிகளால் கண்டிக்கின்றார். இவர்கொண்ட அத்வைதமாகிய சுத்த அறிவுநிலையை யெய்தியவர்கள்,

இத்தரை மீதினிலே யிந்த நாளினில்
இப்பொழு தேமுக்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவு நிலையிற் களிப்பவர்
தூயவர்......................

என்றது, வேதாந்தஉலகத்தில் பலர் தெளியாத புதிய கருத்தாகும். இக்கருத்தை வைணவ சமய சித்தாந்தப் பிரவர்த்தகரான நம்மாழ்வாரும்

"அற்றது பற்றெனில்
உற்றது வீடுயிர்"

என்றும்,

"நன்றாய் ஞானங் கடந்துபோய்
நல்லிந் திரிய மெல்லாமீர்த்
தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா
லுழுப்பி லதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்ப துன்பங்கள்
செற்றுக் களைந்து பசையற்றா
லன்றே யப்போதே வீடு
மதுவே வீடு வீடாமே"

என்றும் மிகவும் அழுத்தமான நடையில் தாம் அநுபவத்தில் கண்டதொன்றாகக் கூறுவதும் நோக்கத்தக்கது.

"ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்"

என்ற திருக்குறளும் இக்கருத்தையே நன்கு வலியுறுத்தும்.

இதனால் அழிவற்றஉண்மைப்பொருளாகிய பரம்பொருளினின்றும் தன்னை வேறாக ஒருவன் நினைத்துக் கொள்வதே, இன்ப துன்பங்களுக்கு வித்தாகுமென்பதும், தானே அழியாத பரம்பொருள் என்ற ஞானம் பெறுவதே முக்தியாகும் என்பதும் இவர் கொண்ட வேதாந்தக் கொள்கைகளாகும்.

"உள்ள தெலாமோ ருயிரென்று தேர்ந்தபின்
உள்ளங் குலைவ துண்டோ"

என்ற அடிகள் இவர் வாழ்க்கையில் கண்டு தெளிந்த உண்மையை விளக்கும்.

இத்தகைய முக்திநிலையை யெய்துவதற்குக் கைக்கொள்ளவேண்டியசாதனங்களில் பாரதியார் முக்கியமாகக் கூறியுள்ளது, அன்பு அல்லது அருள் ஆகும். அன்பிற்கும் அருளிற்கும் பெரிதும் வேறுபாடுண்டு. "அருளென்னு மன்பீன் குழவி" என்றபடி அன்பினின்று பிறப்பது அருளாகும். உறவு, குலம், வகுப்பு, நாடு என்ற தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கள்மேலுஞ் செல்லுவதாகியகருணையே அருள் ஆகும். உலகமெங்கணும் பரந்த சக்திவெள்ளமாகிய அருளிலே யாழ்ந்தவர்களுக்குத்தான் வேதனை நீங்கி முக்திநிலை யுண்டாகுமென்பது,

"வெள்ள மெனப்பொழி தண்ணரு ளாழ்ந்தபின்
வேதனை யுண்டோடா"

என்ற அடிகளால் விளங்கும்.

ஜீவன்முக்தி யென்னும் தலைப்பின்கீழ்ப் பாடியபாடல்களில் மனதொடு கூறும்பொழுது,

"அலைபட்ட கடலுக்குமேலே—சக்தி
அருளென்னுந் தோணியினாலே
தொலையெட்டிக்கரையுற்றுத் துயரற்றுவிடுபட்டுத்
துணிவுற்ற குலசக்தி சரணத்தால் முடிதொட்டு
ஜயமுண்டு பயமில்லை மனமே
ஜன்மத்தில் விடுதலையுண்டு நிலையுண்டு." (ஜய)

என்ற அடிகள் எத்தகைய துன்பத்தி லுழல்பவர்களுக்கும் ஆறுதலைக்கொடுக்கும்.

மேற்கூறிய, பாரதியாரின் தத்துவக் கொள்கைகளையும், மக்கள் விடுதலையடைவதற்காக அவர் கூறியுள்ள உபாயத்தையும் முதலில் தெளிந்து அன்னார் இயற்றிய வேதாந்தப் பாடல்களைப் படித்தல்வேண்டும். அப்படிப் படிப்போருக்கு, வேதாந்தக் கொள்கைகளை வாழ்க்கையில் சோதனை செய்து தெளியக்கூடிய அறிவையும், வேதாந்த நூல்களின் பயனாகிய சித்தத் தெளிவையும் ஆறுதலையும் தைரியத்தையும், வாழ்க்கையில் ஊக்கத்தையும், இப்பாடல்கள் உண்டாக்கும். அவர்களே குலம், வகுப்பு, நாடு, மதம் என்ற வேற்றுமைகளை மறந்து, எல்லாவுயிர்களிடத்தும் அன்புபாராட்டி, பராசக்தியொன்றையே பல பெயர்களோடு, பல வடிவங்களோடு வெவ்வேறாகிய பலசக்திகள் போன்று கொள்கிறார் என்பதைப் பாரதியார்,

ஆத்தி சூடி யிளம்பிறை யணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்
கருநிறங்கொண்டுபாற்கடல்மிசைக்கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை யெனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளியுறு மறிவாம்
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினர்
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்

என்று கூறியபடி உணர்ந்து, உண்[illegible]றமரவாழ்வை எய்துவார்.

192206
m211, N28CN
N35.68

# வில்லிபாரதம்

## இராசராசன்—துரியோதனன்

[105-வது பக்கத் தொடர்ச்சி]

அம் மயக்கத்திற்குக் காரணந்தான் அவனுக்குக் கன்னன் மீதிருந்த, பொருத்தம்காண்பதற்கரிய, அளவற்ற மதிப்பும் வாஞ்சையுமாகும். 'வாஞ்சை' என்று கூறியவுடன், இதயமே யில்லாத அவனது வாழ்க்கையின் எந்திரத் தன்மைக்கச்சொல் எவ்வளவு முரணாகத்தோன்றுகிறது? ஆதலின் தனது தம்பிமாரிடத்திலில்லாத வாஞ்சையும், தனக் குறுதிபயக்கும் வீடுமன் முதலியோரிடத்திலில்லாத மதிப்பும், கன்னன்பால் வைத்திருந்தானெனின் அது ஒரு வியப்பல்லவா? துச்சாதனனும் விகர்ணனும் மற்றும் பலரும் மாய்ந்தபோதும் துயருருத சுயோதனன், கர்ணன் பட்டபோது புலம்புவதும், துரோண வீடுமர்களைவிடச் சிறப்பாக அவனைப் புகழ்வதும் நாம் அறிந்தனவே.

> உதார சீலனுயர் அங்கர்கோன் வரிவில்
> ஒன்றுமே யமையும்

என்று கன்னனைப் புகழ்ந்த பின்னரே, "நீ (வீடுமன்) யிருக்க, நெடுவிற்கை யாசிரிய னிருக்க, நிகரற்றவன் சேயிருக்க, நம்மை யார் எதிர்ப்பார்' என்று கூறுகிறான். மற்றுக் கன்னனுக் கவன்செய்த சிறப்புக்களைக் கன்னனே,

> தேரூரும் அவர்மனைக்கே பிறந்த வென்னைச்
> செம்பொன்மணி முடிசூட்டி அம்பு ராசி
> நீரூரும் புவிபாலர் பலரும் போற்ற
> நின்னினும்சீர் பெறவைத்தாய்

என்னும் இனிய வாசகங்களால் போற்றுகின்றான். இவ்வாறு இவர்களுக்கிடையே விளைந்த நட்பின் உள்ளுறைப் பொருளென்ன?

தனது சிறுவயதில் தன்னிலும்சீர்பாடாகப் பாண்டவர்கள் தமது விற்றிறலினால் விளங்கியதைக் கண்டு இச்சுயோதனன் அழுக்காறு கொண்டது இயல்பே. அவனது அரசியல் பெருந்[illegible]வரும் மதிக்கும்படி விளங்கியது அவன் அரசனானபின்னரே யாயினும் அவ்வரசுக்குச் சிறப்புச் செய்த வணங்காமுடியுடைமைஎன்னும் குணம் அச் சிறு வயதிலேயே அவன்பால் வதிந்திருக்க வேண்டுமாதலின், தனக்கில்லாத மதிப்புப் பிறர்க்கிருப்பதில் அழுக்காறுற்று உழல்வானாயினான். ஆதலின் அம்மதிப்பைக் குலைக்க ஒருவில்லாளி ஏற்பட்டவுடன் அதுகாறும் ஆற்றாமையால் புண்பட்டிருந்த சுயோதனனது மனம் எத்தகைய பேராவலுடன் அவ்வீரனது வரவை நோக்கியிருக்க வேண்டும். போரரங்கத்திலே நின்ற கன்னன் கிரீடியைப் பார்த்து,

> முனைந்தபோரின் முடிதுணித்துன்
> முகசரோ ருகத்தினால்
> சினந்தணிந் தரங்கபூசை செய்குவன்யான்

என்று பகைமையும் வீரமும் தோன்றக் கூறுவானென்றால், சுயோதனன் அவனிடம்வைத்த பரிவும் மகிழ்ச்சியும் ஆயுளளவும் மாறும் தகைத்தோ? இவ்வாறு சுயோதனனுக்கு அவனிடமிருந்த ஆசை அத்தகைய பிற ஆசைகளைப்போல் காரணமின்றிச் செழித்து வளர்ந்தது. மற்று, கர்ணனது பண்பும் அதற்கேற்றதே. எப்படியெனில் சுயோதனன் பொறுமைப்படுமாறு, சொல்வன்மையோ அல்லது எதிர்த்துப் புத்திகூறும் வன்மையோ கன்னனிடம் இல்லை. மற்றைப்படி அவனது வில்வல்லபமும், பாண்டவர்மீது அவன் வைத்தபகையும் தனக்குப் பயன்படுமுறையில் இருந்தன. எனின், அவனிடத்தில் தன் தம்பியரிடத்திலில்லாத நம்பிக்கையும் வீடுமர் துரோணர் முத[illegible]த்தில்லாத மதிப்பும் சுயோதனனுக்குக் கன்னனிட மமைந்திருந்ததில் வியப்பொன்றுமில்லையல்லவா?

எனினும் அவ்வன்பே அவனை அழித்ததென்பதில் ஐயமில்லை. எவ்வாறெனின், கன்னனது குணங்கள் இவ்வாறு தனக்கு எவ்வகையிலும் இனித்திருத்தலின், அவன் சிறந்த விற்றிறலுடையோனெனினும் கிரீடிக்கு இளைத்தவனே என்பதையும், அவன் கொடையாளியாதலின் வரங்களைத் தானம் செய்துவிடுவானென்பதையும், தன்னிடம் எவ்வளவுதான் அன்பு பூண்டவனேனும், வீடுமனைப்போல் தன்னைக் காப்பதற்கேனும் அதருமப்போர் புரியாதவனென்பதையும் கருதினானில்லை. ஆதலின் தன்னுயிர்க்குறுதி பயக்கும் அத்துணைவீரர்களிலும் இத்துணைக் குறைபாடுகளுள்ள வீரனை நம்பியதே இவனது வீழ்ச்சிக்குக்காரணம் என்பது சொல்லாமலே விளங்கும். அக் கர்ணனைப்பற்றி இவன் கூறும் வாசகங்களைப் பின்னும் ஒரு முறை நோக்குவோம்.

> சாமளத் தடம்புள் ளூர்திச்
> சேயலால் தேவர் வாழ்வு
> தேவருக் கியாவ ரீந்தார்
> நீயலால் பின்னைச் சமரில்
> நிலையிடற் குரியா ருண்டோ
> தோயலால் பயந்த காதல்
> சூரனை யனைய சூர

என்று அவன் ஆற்றலைப் பாராட்டிப் பிறகு அவன் மாய்ந்தபோது,

> அணையார்தம் படைக்கடலின் அருநிலைக்குக்
> கரையேற லான கோலப்
> புணையாயெத் திறங்களினும் பகிராம
> லுற்றதெல்லாம் புகலத் தக்க
> துணையாயென் னுயிர்க்குயிராம் தோழனுமா
> கியவுன்னைத் தோற்றே னாகில்
> இணையாரு மிலாவரசே யாரைக்கொண்
> டுலகாள இருக்கின் றேனே.

என்று பிரலாபிக்கிறான். ஒருவனைத் தனது கருமத்தையுன்னி மதித்துக் கௌரவிப்பது தந்திரமாகலாம். ஆனால் இறந்தபின் ஒருவனுக்காக அன்புபூண்டழுவது, உண்மையில் நெஞ்சம் நெகிழ்தலையேகுறிக்கும்; அப்படியாயின் நெஞ்சமென்பதே இல்லாத சுயோதனனுக்கு ஆன்மஉணர்ச்சியுண்டோவென்று கேட்டால், கன்னனிடத்திற் கொண்ட இவ்வகையொரு நல்லுணர்ச்சியைத் தவிர்த்து, அவனுக்கு இதயமேயில்லை என்று கூறிவிடலாம். அவனுக்குக்காதலில்லை; பானுமதி யென்னும் ஒரு மனைவியை யுடையோன், திரௌபதி சுயம்வரத்திற்குச் சென்றான் என்பது கொண்டு ஒன்றும் சொல்வதற்கில்லை. ஏனெனில், தருமனும் ஒருமனைவியை யுடையோன் என்பதனால் அவனை ஒரு காமியென்று சொல்லிவிட முடியுமா? திரௌபதி சுயம்வரத்திற்குச் சென்றது அவள்மேல் விருப்புற்றல்ல வென்பது அவளைப் பின்னாள் அவன் நடத்தியதினின்றும் தெரியவரும். அவன் சென்றது எதற்காகவெனின், தான் சக்கரவர்த்தியாதலின் பல அரசர்களிலும் திரௌபதி தன்னைத் தேர்ந்தெடுப்பது தனக்குக் கௌரவம் என்பதனாலன்றிப் பிறிதன்று. இது இவ்வாறிருக்க, வீரமாவது உண்டோவெனின், அதுதானு மதிகமில்லை யென்பதும் நமக்குத் தெரியவரும். வீமனோடு கதாயுத்தம்நிகழ்த்துகிறானே யென்றும், இறுதியில் வீமன் அவனைச் சூதினாலன்றோ வென்றிகொள்கிறானென்றும் கேட்கவேண்டா. கதாயுதத்திறன் சிறந்த வீரத்திற்கு அறிகுறியென்று கருதப்படவில்லை. ஆதலின் வில்லிற் சிறந்த விசயன் கதாயுதம் அறியானென்பது உண்மையாயிருந்தும், கதையிற் சிறந்த வீமன் வில்லும் பயின்ற வீரனாயினான். ஆதலின் விற்போரே வீரத்திற்குஅறிகுறியாதலாலும் விற்போரில் சுயோதனன் ஒருபோழ்தத்தும் ஒருவரையும் செயித்தவனல்லனாதலாலும் அவனை வீரன் என்று கூறமுடியாது; ‡ அன்றியும், தனது வீரத்தைப் பற்றி அவனும் தன்னைப் புகழ்ந்துகொள்வதில்லை. கதைப்போரிலேனும் யாவரினும் மிக்கோன் தானென்று பகராமல் தனக்கு வீரம் ஒரு பொருளல்ல வென்றுவிட்டு, பாரரசாள்வதே தனக்கிருக்கும் ஏற்றம் என்று கூறுவான்.



> என்னினும்பார் தனக்குரியன் சிலைத்தொழிலில்
> சிலைக்குருவாய் எவரும் போற்றும்
> மன்னினும்தான் மிகவலியன் தண்டெடுத்தா
> லுந்தையினும் வலியன் சால.

ஆதலின், வீரத்தை ஒரு பொருட்படுத்தாமல், சூதினாலாதல் நேர்மையினாலாதல் கிடைத்த வெற்றியையே பொருள்படுத்துகின்ற இவனை, திசையானையின் கோடுழுத மார்பனான இராவணன் முதலியோரைப் போல வீரம் உடையவனென்று எவ்வாறுகூறுவது?

இராவணனோ வென்னின் காதலால் மாண்டொழிந்தவர்களில் ஒருவன்; காதலே பிரபஞ்சமாக அமைக்கப்பட்டதொரு கதையின் நாயகன். மற்று அவன் தன் வீரமோ உலகாதாயம் ஒன்றையும் நாடாமல் தோள்வலியைக்காட்டத் திசையானையுடன் பொருத வீரம். காதலால் அழிந்தவர் சரித்திரத்திற்குத் தெரிந்தவர் எண்ணிறந்தவர்; அவ்வாறே வீரத்திற்கென உயிரை யீந்தவரும் பல்லாயிரர்.$ ஆதலின், அத்தகைய வீரமேனும் காதலேனும் ஒரு சிறிதேனுமிருக்குமாயினிவன் (சுயோதனன்) கண்ணனது ஒருசிறிய சூழ்ச்சிக்கு இரையாகி விடுவனன்றோ? இராமாயணத்தில் இராமபிரான் சூழ்ச்சியுடையோனல்லன்; அதனால் இராவணன் ஆரணிய காண்டத்தில் சமாப்தி அடையவில்லை. மேலும் அங்குள்ள உலகமோ, கம்பநாடரது கவித்திருவினாலன்றி, இந்நிலவுலகுடன் ஒன்றுத தொரு சொப்பன உலகம். பாரத வுலகம் அவ்வாறில்லை. பாரதத்தைப் படிக்கும்போது, முகலாய இராச்சியத்தின் சரித்திரச் சிறப்பும், அரசியல்வாதி வால்போலின் அரசியல் முறைகளும், பிரான்ஸ் தேசத்துப் பதினொன்றாம் லூயியின் நினைவும் வருமெனின், அது நாம் கண்கொடு பார்க்கும், ஊனும் குருதியும் போர்த்த மனிதர் நிலவும், இப் பிரத்தியக்ஷ நிலவுலகமே. ஆதலின் இதில் தீமையின் உருவமாயிருந்த துரியோதனன் கண்ணபிரானது அதிமாநுட தந்திரத்திற்குப் பிழைத்துக் கதைமுழுதும் திகழ்வதெனின், அவன், சரித்திரத்திலுள்ள, சூழ்ச்சியினால் சூழ்வேலை உலகாளும் அரசர்களைப்போல், ஆன்ம உணர்ச்சிகளால் கட்டுப்படாத எந்திரமனைய வாழ்க்கையுடையோனாகவல்லவோ இருக்கவேண்டும்?

ஆம், சரித்திரத்திலுள்ள அரசியல் வாதிகளைப் போலத் தனது பேராசை வெறிக்கு எதனையும் பலியிடும் பான்மையும் இவனுக்கில்லாமல் போகவில்லை. அவ்வெறியோ சுற்றமென்றும் கிளையென்றும் நட்பென்றும் கண்கொண்டு பார்க்கும் தன்மையதல்ல. ஒரு மந்திரிசபையில் தன்னைப்போன்ற இன்னொருவனுக்கு இடமில்லை யென்றன்றோ வால்போல் தனது ஆருயிர் நண்பன் பல்டினியை எதிர்த்துக்கொண்டான்? உரோம சாம்ராஜ்ய நாளில் உரோமாபுரியை அகஸ்டஸ் ஸீஸரும் ஆண்டனியும் இருவராக ஆண்டு வந்தனர். இந்த ஆண்டனி, கிளியோபாட்ரா என்னும்காமக்கிழத்தியின்பால்நன்குசிக்கியதையறிந்தும் அகஸ்டஸ்ஸீஸர் தன் தங்கையை அவனுக்கு மணமுடித்து, பின் அவன் தன் மனைவியுடன் வாழாமல், கிளியோபாட்ராவிடம் சென்றபோது, தன் மனைவியைத் துறந்தான் என்பதே வியாஜமாக ஸீஸர் ஆண்டனியுடன்போரிட்டுத்தொலைத்தான். அதுவும் ஷேக்ஸ்பியர் நாடகத்தில், ஸீஸர் இவ்வாறு நடக்குமென்று எதிர்பார்த்தே, ஆண்டனியைத் தொலைக்க ஒரு வழியென்றே நினைத்துத் தன் தங்கையை அவனுக்கு மணமுடித்தானென வறிகிறோம். (இதனை ஆராய்ச்சியாளர்கள் தங்கள் நுட்ப ஆராய்ச்சியினால் காட்டுகிறார்கள்.) அதைப் போலவே சுயோதனனும், பதின்மூன்றாம் நாள் கடோற்கசன் தூதுவந்து, விசயன் வஞ்சினம் கழறியதைக் கூறியதும், அருச்சுனன் கணைக்குப் பயந்து தன்னுடுசெல்ல விருந்த சயத்திரதனைப் பலவிதப்புகழ்ச்சிகள் செய்துநிறுத்தி, விசயன் வெந்தணல் குளிக்கவேண்டும் என்னும் ஆத்திரத்தினால் பகைவனது கொடுமைக்கு அவனை இலக்காக வைத்தது மல்லாமல் அவன் இறந்துபட்டதும், சகோதரியின் புருஷன் பட்டதற்குச் சிறிதேனும் துயருறாமல், அருச்சுனன் அவனைச் சூரியன் பட்டபின் படுத்தானாதலின் சபதம் பிழைத்தானென எண்ணிக் கழிபேருவகை பூத்து, துச்சாதனன் முதலோருடன் கூடி யார்த்ததைப் பார்ப்பின் அவனையும் அவனைச் சேர்ந்தோரையும் அலகைக் குலங்களென்று கூறாமல் வேறு என்ன நாமமிட் டழைப்பது?

‡ மற்றைப்படி, 'விதாரமொய்ம்ப' னென்றும் 'வாம்பிலா வென்றி வேலா'னென்றும், 'ஒருவர்க் கழியாதோன்' என்றும் கவிஞர்கூறுவதெல்லாம், 'சேயுந் தனக்கு நிகரில்லாச் சிகண்டி' என்பதையும், போர்தவுறாது புறங்கொடுக்கும் திட்டத்துய்மனைப் போரிற் பின்னிடாத அந்தணன் மைந்தன் என்று கூறுவதையும் ஒக்கும். மற்று, காட்டில் உடையின்றி நின்ற நளனைத் 'தேர்வேந்தே' என்று தமயந்தி கூறும் பொருளில்லா அடைமொழிபோலக் கொள்ளலாம்.

$ முக்கியமாக இங்கு ஷேக்ஸ்பியாது ஆண்டனி கிளியோபாட்ரா நாடகம் நினைவுக்குவருமெனின் சுவைக்கும். உலகம் புரக்கும் வன்மையெல்லாம் காதற்காக அழிந்தசரிதமாகிய அது பொதுத்தத்துவத்தில் கம்பராமாயணத்தையொற்றியிருக்கின்றது. மற்றைப்படி, வீரத்திற்காகமாண்டவர்கள் தொகையை இரசபுதன சரித்திரம் கூறும். பிரான்ஸ் தேசத்துப் பதினொன்றாம் லூயி அரசன் தனக்கடங்காத சிற்றரசனைத் தூண்டிவிட்டு அவனினும் வலிய பகைவர்களுடன் போரிடச் செய்து அவனது அழிவைக் கண்டவன். முகலாய அரசியலிலும் வலிமை மிகுந்தவர்களது தோளின் தினவுக்கு வேண்டிய பகைவரைத் தேடிக்கொடுக்கும் இம்முறை மிகுதியும் கையாளப்பட்டு வந்தது. செல்வாக்கிலும் சேனைப் பலத்திலும் சிறந்த மீர் ஜம்லா என்னும் சிற்றரசனை அவுரங்கசீப் அஸ்ஸாம் மலைப்பிரதேசங்களில் சென்று போரிடும்படி ஏவித் தன் சேனையையும் துணைகூட்டி யனுப்பினான். மிக்க கடுமையான ஏவலிலும் வெற்றியுடன் மீண்டான் மீர் ஜம்லா. சிறிதுகாலத்துக்கெல்லாம் அவனிறந்ததும் அவனது மகனைப் பார்த்துச் சக்கரவர்த்தி, 'நீ உன் தகப்பனையும் நான் எனக்கு ஆபத்தான நண்பனையும்இழந்தோம்'என்றானாம்.


காலரா மருந்து
IDL விங்யூர்
சத்வைத்யசாலை நஞ்சன்கூடு ரூ. 1.8.0. வி.பி.இல்லை. யுனைட்டெட் கன்ஸர்ன் 54 பந்தர்தெரு மதராஸ்

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கெர்ப்பாசய டானிக். ரூ.2.0.0
சூதக டானிக். ரூ.1.8.0
ஏமாற வேண்டாம்
நேரில் பெற்றுக்கொள்க

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
ஸ்ரீகர கஸ்தூரிமாத்திரை. 0-4-0
கோரோஜனை .. 0-6-0
பாலசஞ்சீவினி .. 0-4-0
பாலஸுதா டானிக் ரூ 1

40 நாட்கள்
உபயோகப்
பாக்கெட்
அணு ஒன்று

IDL ச்யாவனப்ராச IDL பிருங்காமலக தைலம் கோரோஜனா மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம் பாக்கெட் IDL டி. மெடிகேடட் டப்பி
ஜவரேக்
IDL ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

போலிகள் இருப்பதால் வீதிகளில் [illegible] வேண்[illegible]ம்

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

கேள்விக்கு 75 ரூபாய்:-இந்தியர் சட்ட சபையில் ஜனப்பிரதிநிதிகள் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் பதில் தயார் செய்வதற்குச் சுமார் எழுபத்தைந்து ரூபாய் செலவாகிறதென்று பொக்கிஷ மெம்பர் சொன்னார். நாள்தோறும் கேள்விக்காக ஒருமணி நேரமே ஒதுக்கப்பட்டிருந்தும் இதுவரை 1400 கேள்விகள் கேட்கப்பட்டுப்பதில் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே மொத்தக் கேள்விக்காக, ஒரு லட்சத்தி ஐயாயிரம் ரூபாய் செலவு ஏற்பட்டிருக்கவேண்டும்.

* * *

18-க்கு மேல் பண்டிதை:—ஸ்பெயின் தேசத்தில் ஜோரிட்டா என்னும் ஊரில் வாழ்ந்திருக்கும் ஒரு வண்ணாத்திக்குப் பதினெட்டு வயதுவரை எழுத்து வாசனையே தெரியாது. அவள் இருபது வயதுக்குள் அதாவது இரண்டே வருஷங்களில் பீ. ஏ. பரிட்சையில் தேறி எஞ்சினியரிங் பரிட்சையிலும் தேறிவிட்டாள். அவள் தனக்கு எஞ்சினியர்வேலை கொடுக்கும்படி அதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறாள்.

* * *

வர்ண மலை:—இங்கிலாந்தில் "வானவில்" மலையென ஒரு சிறு மலை இருக்கிறது. அதற்கு இப்பெயர் வருவதற்குக் காரணம் அந்த மலையில் உறைந்திருக்கும் களிமண் பச்சை, சிவப்பு, மஞ்சள் முதலிய பல நிறங்களில் அமைந்திருப்பதே யாகும். அப்பகுதியிலுள்ள ஏழைகள் அந்தக் களிமண்ணை எடுத்து உலர்த்திப் பொடியாக்கி அத்துடன் தண்ணீரோ, அல்லது எண்ணெயோ சேர்த்து வீடுகளுக்கு வர்ணம் பூசிக் கொள்ளுகிறார்கள்.

இண்டோ-கம்மர்ஷியல்
பாங்க், லிமிடெட்.
மாயவரம்
சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனாபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்
எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.
S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதராஸ்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
1933 Results.
New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.
Specialities.
Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.
For agencies please apply to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.
Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.
A sound Company.
Please apply for particulars to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)